Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 | திருவள்ளுவர் ஆண்டு- 2036 | பங்குனி-20 | 02-04-2005 | சனிக்கிழமை | ஓசை 43



S.M கோல்ட் ஹவுஸ்

வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.

உரிமையாளர்:- S.M. சண்முகரத்தினம்.

T.P: 024-222 4247

(சி-1481)

# தமிழர் குறித்த சிறில. அரசின் நிலைப்பாடு;

# பின்லாந்து ம.உ.அமைப்பிற்கு புலிகள் விளக்கம்!

## ஹெல்சிங்கில் நடந்த சந்திப்பு

(ஹெல்சிங்)

**தமிழ் மக்கள் மீதான சிறிலங்கா அரசின் போக்கு மற்றும் தற்போதைய அரசியல் சூழ்நிலை தொடர்பாக அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் பின்லாந்தின் மனித உரிமைகள் அமைப்பின் பிரதிநிதிக்கு எடுத்துக் கூறியுள்ளார்.**

பின்லாந்து, ஹெல்சிங் நகரில் அமைந்துள்ள நாடாளுமன்ற வளாகத்தில் வியாழக்கிழமை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

பின்லாந்து வெளிநாட்டு அமைச்சினால் ஒழுங்குச் செய்யப்பட்ட இந்தச் சந்திப்பில், அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், சர்வதேச மனித உரிமைகள் அமைப்பிற்கான பின்லாந்துக் கிளையின் தலைமைப் பொறுப்பாளரும் நாடாளுமன்ற

(12ஆம் பக்கம் பார்க்க)

## கொம்மாந்துறையில் இளைஞர் நேற்றிரவு சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனை வீதி கொம்மாந்துறையில் நேற்று இரவு 7.00 மணியளவில் இளைஞரொருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

புத்திசிகாமணி குகதாசன் (வயது-23) என அடையாளம் காணப்பட்டுள்ள இவர் பொலநறுவையில் தங்கியிருப்பவர் என்றும், வீட்டிற்கு வந்த சமயம் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகவும் கூறப்படுகின்றது..

வீட்டிலிருந்து அருகிலுள்ள பிள்ளையார் கோவிலுக்குச் துவிச்சக்கரவண்டியில் சென்று திரும்பிக் கொண்டிருந்த சமயம் மற்றொரு துவிச்சக்கரவண்டியில் வழிமறித்த இரண்டு இளைஞர்கள் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டுத் தப்பிச் சென்றுள்ளார்கள். சம்பவம் தொடர்பாக ஏறாவூர் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

## "போரும் சமாதானமும்" நூல் தமிழில் வெளியிட ஏற்பாடு

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்கள் எழுதிய போரும் சமாதானமும் என்ற ஆங்கில நூலின் தமிழாக்கம் விரைவில் வெளிவரவுள்ளது.

அன்ரன் பாலசிங்கம் அவர்களே இந்த நூலைத் தமிழாக்கம் செய்கிறார். "போரும் சமாதானமும்" ஆங்கில நூல் அண்மையில் கனடாவிலும், தமிழீழம் உட்பட உலகின் பல நாடுகளிலும் வெளியிடப்பட்டது.

## சனாதிபதியின் தன்னிச்சையான முடிவுகளால் ஆளும் தரப்பிற்குள் கடும் அதிருப்தி!

### சனாதிபதியைக் கட்டுப்படுத்த அமைச்சர் குழு

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தேசிய பிரச்சினைகள் தொடர்பாக தன்னிச்சையான முடிவுகள் எடுப்பதையிட்டு ஆளும் தரப்பிற்குள் கடும் அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அவருக்கு அழுத்தம் கொடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேசியப் பிரச்சினைகள் சம்பந்தமாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இனிமேல் தனித் தீர்மானங்களை எடுக்க முடியாது அரசின் பங்காளிக் கட்சியான

(12ஆம் பக்கம் பார்க்க)

## சிறுமி ஒப்படைப்பு

விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்துகொள்ள வந்த சிறுமி ஒருத்தி நேற்று அம்பாறை மாவட்ட யுனிசெப் அமைப்பின் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டார். இது தம்பிலுவில் பிரதேசத்தில் உள்ள புலிகளின் மாவட்ட அரசியல்துறைச் செயலகத்தில் நடைபெற்றது.

14 வயதுடைய ஜீவராசா ஜெயந்தினி என்ற சிறுமியே காலை 11.30 மணியளவில், யுனிசெப் அமைப்பின் அம்பாறை மாவட்ட

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் வாகனத்துள் ரவைகளை போடமுயன்ற சிப்பாய்!

மட்டக்களப்பிலிருந்து வன்னிக்கு விஜயம் செய்த தமிழீழ விடுதலைப்புலிகளின் வாகனத் தினுள் துப்பாக்கி ரவைகளை போட முயன்ற இராணுவச் சிப்பாய் விடுதலைப்புலிகளினால் அவதானிக்கப்பட்டு போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது நேற்றுக் காலை 8.30 மணியளவில் மட்டக்களப்பிலிருந்து வன்னி நோக்கிப் பயணித்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வாகரைப் பிரதேசத்தின் கண்காணிப்புப் பணிகளை திருமலை க.கா குழு பொறுப்பேற்க வலியுறுத்து

### -எழிலனுடனான நேற்றைய சந்திப்பில் முடிவு

இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமான சந்திப்பொன்று திருகோணமலையில் நேற்று நடைபெற்றுள்ளது.

இந்தச் சந்திப்புக்குறித்து கருத்துத் தெரிவித்த திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன். இது ஒரு வழமையான சந்திப்பெனக் கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

திருகோணமலை மாவட்டத்தின் ஒரு பகுதியாகக் கிழக்கு மாகாணத்தின் வாகரைப் பிரதேசம் இணைக்கப்பட்டுள்ளது. இதுவரை காலமும் வாகரைப்பிரதேசத்தின் கண்காணிப்புக்குழுவின் நடவடிக்கைகள் மட்டக்களப்பு மாவட்ட கண்காணிப்புக்குழுவினரால்தான் கண்காணிக்கப்பட்டு வந்தது. ஆனால் தற்போது திருகோணமலை மாவட்டத்துடன் வாகரை இணைக்கப்பட்டுள்ளமையால் அங்கே நடைபெற்று வந்த அரசியல் இராணுவ நடவடிக்கை

(12ஆம் பக்கம் பார்க்க)

## பாரவூர்தி மோதியது இரு மாணவர் காயம்

(அலுவலகசெய்தியாளர்)

பாடசாலை சென்ற மாணவர்கள் இருவரை பாரவூர்தி மோதியதில் பாடசாலை மாணவர் இருவரும் காயங்களுக்குள்ளான நிலையில் வைத்திசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி சம்பவம் நேற்றுக் காலை 7.30 மணியளவில் பூநகரி ஞானிமடத்தில் இடம்பெற்றுள்ளது.

நேற்றுக்காலை பாடசாலைக்கு மேற்படி மாணவர் இருவரும் சென்றுகொண்டிருக்கும் பொழுதே

(12ஆம் பக்கம் பார்க்க)

## கன்ரர் வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்ட உந்துருளிச் சாரதி விபத்தில் சிக்கிப்பலி!

### -ஏ-9 நெடுஞ்சாலையில் சம்பவம்

(அலுவலக செய்தியாளர்)

ஏ-9 நெடுஞ்சாலையில் நேற்று இடம் பெற்ற வாகன விபத்தில் ஒருவர் பலியானார். இச்சம்பவம் புதூர் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி சம்பவம் நேற்றுப் பிற்பகல் 4.30 மணியளவில் கனகராயன் குளத்திற்கும், புளியங்குளத்திற்குமிடைப்பட்ட பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வவுனியா நோக்கிச் சென்றுகொண்டிருந்த கன்ரர்வாகனத்தினை உந்துருளியில் பயணித்தவர் முந்திச்செல்ல எத்தணிக்கையிலேயே மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

புங்குடுதீவினைச் சொந்த முகவரியாகவும், வெள்ளவத்தையினை தற்போதைய முகவரியாகவும் கொண்ட நடராசா

(12ஆம் பக்கம் பார்க்க)

## 50ஆயிரம் இராணுவத்தினர் தலைமறைவு சுயமாக விலக மற்றுமொரு சந்தர்ப்பம்!

### சிறிலங்கா அரசு அறிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்திலிருந்து தப்பியோடிய இராணுவத்தினர் சேவையிலிருந்து தாமாக விலகிக்கொள்வதற்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தை சிறிலங்கா அரசாங்கம் வழங்கியுள்ளது. இது தொடர்பான அறிவித்தல் நேற்று விடுக்கப்பட்டது.

எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் மே மாதம் 7 ஆம் திகதி வரை இதற்கான கால எல்லை அறிவிக்கப்பட்டிருக்கிறது. 5 ஆவது தடவையாக இவ்வாறான சந்தர்ப்பம் தப்பியோடிய படையினருக்கு வழங்கப்பட்டுள்ளது.

முன்னர் விடுக்கப்பட்ட அறிவித்தல்களின் போது சுமார் 10 ஆயிரம் பேர் கொழும்பு, அனுராதபுரம், குருநாகல் கம்பகா, களுத்துறை

(12ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## காணி விற்பனைக்கு

கிளிநொச்சி நகரிலிருந்து 1 1/2 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளதும் திருவையாறு முதலாம் பகுதியில் உள்ளதுமான தென்னை, மா,பலா, போன்ற பயன்தரு மரங்கள் அடங்கிய இரண்டு ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பிரித்துக்கொடுக்கப் படும். தொடர்பு:- T.P 077 316 4615 (5957)

## வீடு வாடகைக்கு

இல:32 அணைக்கட்டு வீதி, திருநகர் (வைத்தியசாலை பின்புறம், பிரதான வீதி (ஏ.09) வீதியில் இருந்து 1300 மீற்றர் வீடு வாடகைக்கு விடப் படும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: பொ.நவமணி, அண்ணாவீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி.

## தவறிவிட்டது

இரணைமடுவிற்கும்- கிளி.மாவீரர் துயிலுமில்லத்திற்குமிடையில் கந்த சாமி லிங்கேஸ்வரன் என்பவருடைய பேசுடன் பயண அனுமதி அட்டை, **840674568V** எனுமிலக்கமுடைய தேசிய அடையாள அட்டை என்பன 27.03.2005 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சி ஈழ நாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். தகவல்:- க.லிங்கேஸ்வரன்.(சி.11559)

# மக்கள் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். அனலைதீவுப் பகுதியைச் சேர்ந்த மக்கள் தாம் நிவாரண உதவி வழங்கல்களில் புறக்கணிக்கப்பட்டு வருவதை ஆட்சேபித்து ஊர்காவல் துறை உதவி அரசாங்க அதிபரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

கடந்த கால யுத்த அனர்த்தங்களால் தாம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள போதும் தமக்கான அரசநிவாரண உதவிகள் எதுவும் இதுவரைகிடைக் கவில்லை. என்பதைச் சுட்டிக் காட்டியே அனலைதீவுப்பகுதியைச் சேர்ந்த தொண்ணூறு பேர் ஊர் காவல்துறை உதவி அரச அதிபரிடம் இம்முறைப் பாட்டைத் தெரிவித்துள்ளதுடன் தமக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் கோரியுள்ளனர்.

## நூல் அறிமுகவிழா

(யாழ்ப்பாணம்)

ஏ.ஆர் அருட்பிரகாசம் அருள் அவர்களின் "பணச்சுரண்டல்" என்னும் நூல் அறிமுகவிழா இன்று மாலை நான்கு மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் கலாச்சார மண்டபத்தில் கலாநிதி க.குணராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

நூலின் அறிமுகவுரையை பேராசிரியர் இரா.சிவச்சந்திரனும் ஆய்வுரைகளை பேராசிரியர் வி.நித்தியானந்தன், எந்திரி ம.விக்னேஸ்வரன் சிரேஷ்ட விரிவுரையாளர் ந.பேரின்பநாதன் ஆகியோரும் ஏற்புரையை நூலாசிரியர் ஏ.ஆர் அருட்பிரகாசமும் ஆற்றவுள்ளனர்.

# அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

01.04.2005 நேற்று எமது வித்தியாலயத்தின், 2 ஆம் ஆண்டு நிறைவையொட்டிய அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின் விபரம்

| | இலக்கம் |
|---|---|
| முதலாம் பரிசு | 4869 |
| இரண்டாம் பரிசு | 4196 |
| மூன்றாம் பரிசு | 3375 |

ஆறுதல் பரிசுகள்

| இலக்கம் | |
|---|---|
| 4776 | 2742 |
| 203 | 3358 |
| 1475 | 2896 |
| 2726 | 2408 |
| 3520 | 1319 |

பரிசுக்குரியோர் தமது பரிசுப்பொருட்களை எமது வித்தியாலயத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதனை அறியத்தருகின்றோம்.

அதிபர்
கிளி/பூநகரி அதிபர் ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்
4 ஆம் கட்டை,
பூநகரி.

(5907)

# கண்ணீர் வணக்கம்

## அமரர் வைரவப்பிள்ளை சண்முகசுந்தரம்

தமிழீழ வைப்பகப் பணியாளர் திரு. ச. சியாமளன் அவர்களின் தந்தையார் திரு. வைரவப்பிள்ளை சண்முகசுந்தரம் அவர்கள் 31.03.2005 அன்று யாழ்ப்பாணத்தில் இயற்கை எய்தியதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**பணிப்பாளர், பணியாளர்கள், தமிழீழ வைப்பகம்.**

(சி-11618)

# சாவு அறிவித்தல்



**கந்தையா சபாரத்தினம்**

பிறப்பு:-09.02.1932 இறப்பு:-31.03.2005

3 ஆம் வட்டாரம், குறிகாட்டுவான், புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், செல்வா நகர், யூதா கோவில் வீதி, கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சபாரத்தினம் 31.03.2005 வியாழக்கிழமை காலமானார். அன்னார் காலம்சென்ற கந்தையா தம்பதிகளின் அன்பு மகனும், ஜெகதீஸ்வரியின் அன்புக் கணவரும், ஸ்ரீ கவுரி (செல்வாநகர்) ஜெயசங்கர் (கனடா) ரவிசங்கர் (சுவிஸ்), ஜெயகவுரி (கனடா), தவச்செல்வன் (கனடா),லக்சுமி தேவி (செல்வாநகர்) மதிசங்கர் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார். சரோஜினி தேவி, ரூபி, ஜெகதீஸ்வரன், சுதேந்திரன் காலம் சென்ற தயாபரம் (போக்குவரத்து கண்காணிப்பு பிரிவு) ஆகியோரின் மாமனும் சாயிஸ், சஞ்சீவிஸ்வரியா, வித்தியா, சானுகா, கெவின் (சுவிஸ்), சாமிதா, சாயிஸ், சாருகா, சுகனியா (கனடா), லக்சிகா, கல்யாணி, ரோகினி (செல்வாநகர்) ஆகியோரின் பேரனும், அருள்பலம் மகேஸ்வரி, மோக வாணன் (சித்தப்பா) செல்வா நகர் கணேசபிள்ளை சிவபாக்கியம் (கொழும்பு) ஆகியோரின் சகோதரனும், கணேசபிள்ளை (T.S.K உரிமையாளர் கொழும்பு அருளம்பலம் (புங்குடுதீவு )ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரிகைகள் செல்வாநகர் இல்லத்தில் 03.04.2005 நாளை காலை 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக ஆனந்தநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்ளுகின்றோம்.

தகவல்:-
த.தணிகாசலன்
(மைத்துனர்)

(5963)

# சுனாமித் துயரத்தின் சிகரத்தில் நின்ற...

## 98ஆம் நாள் நினைவஞ்சலி



**த.ஜெயராஜ்** (ஜெகன்)
தாயின் மடியில் : 14-06-1985

**த.குமுதம்மா** (ரஞ்சினி)
தாயின் மடியில் : 25-04-1960

**த. தர்மினி** (பானுஜா)
தாயின் பிடியில் : 03-02-1994

**கடலின் பிடியில் : 26-12-2004**

பாலுடன் சேர்த்து பாசத்தையும் பகிர்ந்தோம்
அன்புடன் குழைத்து அறிவையும் பகிர்ந்தோம்
மின்னாமல் முழங்காமல் இடியொன்று விழுந்தது
காற்றோடு வந்தொரு சேதி காதைச் சுட்டதுவும்
பாரோடு வந்து உம் கட்டுடல் தேடி
காணாது கதறியழுதோம்
வழிந்தோடும் விழிநீரில்
எங்கள் விழிதேடும் உங்கள் திருமுகம்
விழிதேடும் இடமெல்லாம் விம்பமாய் வருவாரே!
கண்ணீரில் கரைகிறோம் கதிகலங்கித் தவிக்கிறோம்.
காலங்கள் ஓடினாலும் உங்கள் நினைவுகள் மாறாது
நீண்ட நெடும் பயணமாய் எங்கு நீர் சென்றீர்
உங்கள் நினைவுகள் எமை வாட்ட
இதய ஒலியும் அதைத்தான் மீட்டுகிறது.
எங்கள் ஈர விழிகள் காய்ந்திட முன் – மறுபடியும்
இங்கு வந்து பிறந்திடுங்கள்....

தாரண வருடம் 02.04.2005 (சனிக்கிழமை) பங்குனி 20ஆம் நாள் அட்டமித்திதி கூடிய வேளையில் நடைபெறும் எம்குலவிளக்குகளின் ஆத்ம சாந்திக் கிரியை வழிபாட்டிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொண்டு ஆறுதல் நல்குமாறு அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

தற்காலிக முகவரி:
உண்ணாப்புலவு,
முல்லைத்தீவு.

(5816)


ம. தர்மராசா, பிள்ளைகள்,
கள்ளப்பாடு, முல்லைத்தீவு.

# "செயலர் பதவியை இராஜினாமாச் செய்யேன்: ஐக்கியநாடுகள் பொதுச் செயலர் அறிவிப்பு

(நியூயோர்க்)

"ஐ.நா பொதுச் செயலர் பதவியிலிருந்து விலகமாட்டேன்'' என்று அதன் பொதுச் செயலர் கொபிஅனான் தெரிவித்துள்ளார்.

ஈராக்கின் எண்ணெயை விற்று உணவுப் பொருட்களை வாங்கும் முந்தைய திட்டம் தொடர்பான ஊழல் புகார் குறித்த இடைக் கால விசாரணை அறிக்கையை செவ்வாய்க் கிழமை வெளியிட்டு நிருபர்களிடம் அனான் கூறியதாவது பொதுச்செயலர் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்யும் பேச்சுக்கு இடமேயில்லை. ஐ.நா அமைப்பில் சீர் திருத்தம் கொண்டு வருவற்கான திட்டத்தை முழு முனைப்புடன் செயற்படுத்துவேன் எண்ணெயை விற்று உணவுப் பொருள் வாங்கும் திட்டத்தில் எனக்கு எவ்வித தொடர்பும் இல்லை. இடைக்கால விசாரணை அறிக்கை என்னை நிரபராதி என்று அறிவித்துள்ளது.



இந்த விசாரணைக் குழு யார் தலையீடுமின்றி சுயேட்சையாக விசாரணை நடத்தியது.என்னை நிரபராதி என்று அறிவித்தது. நிம்மதி தருகிறது. அமெரிக்க என்று பெடரல் வங்கி முன்னாள் தலைவர் பால்வாக்கர். தலைமையிலான விசாரணைக்குழுவுக்கு எனது மகன் கோஜோ ஒத்துழைப்புத் தரவேண்டும். கோஜோ ஒத்துழைப்புத் தரவில்லை என்று விசாரணை அறிக்கை தெரிவிக்கிறது. இது எனக்கு மன வேதனையைத் தருகிறது. விசாரணைக்கு ஒத்துழைப்புத் தரவேண்டும் என எனது மகனையும் நான் கேட்டுக் கொள்கின்றேன். என்றார் அனான்.

எண்ணெய் விற்று உணவுப் பொருள் வாங்க ஈராக்கை அனுமதிக்கும் திட்டம் முன்னர் அமுலில் இருந்தது. ஐ.நா ஆதரவில் இந்தத் திட்டம் நடைபெற்றது. இந்தத் திட்டத்தில் அனானின் மகனுக்கு உள்ள வர்த்தகத் தொடர்பு குறித்த பல்வேறு கேள்விகளுக்கு விடை தெரியாமல் உள்ளதாக இடைக்கால விசாரணை அறிக்கை தெரிவிக்கிறது.

# போப்பின் உடல் நிலை கவலைக்கிடம் எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம்

(வத்திகான்)

போப்பாண்டவர் இராண்டாம் ஜோன் போல் கடந்த சில நாட்களாகவே உடல் நலக் குறைவால் சிரமப்பட்டு வருகிறார். இந்நிலையில் அவருக்கு மீண்டும் மாரடைப்பு ஏற்பட்டு அவரது உடல்நிலை மேலும் மோசம் அடைந்து கவலைக்கிடமாகவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பெப்ரவரி மாதம் நகரில் உள்ள மருத்துவ மனையில் போப்பாண்டவருக்கு தொண்டையில் அறுவைச் சிகிச்சை நடைபெற்றது. பின்னர் வத்திக்கான் திரும்பிய நிலையிலும் அவரது உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்படவில்லை.

இந்நிலையில் இப்போது அவரது சிறுநீக் குழாயில் கிருமிகள் பரவியுள்ளது. அதனால் அவருக்குக் கடுமையான காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. அவருக்கு வத்திக்கானிலேயே சிகிச்சை அளிக்கப்படுகிறது. மருத்துவக் குழுவினர் இரவு,பகலாக அவரது உடல் நிலையைக் கண்காணித்து வருகின்றனர்.



படுத்தபடுக்கையாகவுள்ள போப்பாண்டவருக்கு ஆத்ம பரிசுத்தப் பிர்த்தனை நடைபெற்றதாக வத்திக்கான் செய்தித் தொடர்பாளர் ஜோவாகுவின் நவாரோ வால்ஸ் கூறினார். மரணப் படுக்கையில் உள்ளவர்களுக்கு இது போன்று பிரார்த்தனைகள் நடைபெறுவது வழக்கம். அவர் மேலும் கூறுகையில், போப்பாண்டவரின் உடல் நிலை மிகவும் கவலைக்கிடமாகவுள்ளது. எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம் என்றார். இதனால் மருத்துவ ரீதியாக இறுதிவரை உயிர் வாழவேண்டும் என்ற போயாண்டவரின் இறுதி விருப்பம் நிறைவேற்றப்படுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

# இந்தோனேஷியாவில் இன்னும் நிலநடுக்கம் ஒய்ந்தபாழல்லை



இந்தோனேக்ஷியா நாட்டின் நியாஸ் தீவில் நிலநடுக்கத்தின்போது காயமடைந்த இப் பெண் உலங்குவானூர்தியில் நாட்டின் மேற்குக் கடலோரப் பகுதிக்கு அழைத்து வரப்பட்டு மருத்துவமனைக்கு அம்பியுலன்ஸில் ஏற்றப்படுகிறார்.

(ஜகார்த்தா)

**இந்தோனேஷியாவில் கடந்த திங்கட்கிழமை ஏற்பட்ட கடும் நிலநடுக்கத்தை அடுத்து அங்கு இன்னும் நிலநடுக்கம் தொடர்ந்து ஏற்பட்டபடி உள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.**

கடந்த வியாழக்கிழமையும் சுமாத்திரா தீவின் சில இடங்களில், நில நடுக்கம் உணரப்பட்டது. மிதமான இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவு மானியில் 5.1 எனப் பதிவானது. சுமாத்திராவின் மேற்குக் கடற்கரைப் பகுதியில் காலை 5.11 மணிக்கு இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது என்று டில்லியிலுள்ள நில நடுக்க கண்காணிப்பு மையம் தெரிவித்தது.

இந் நிலநடுக்கத்தால் 620 இற்கும் அதிகமானோர் இறந்து விட்டமை உறுதியாகியுள்ளது. நியாஸ் தீவில் மட்டும் 600 பேர் இறந்து விட்டதாக ஐ.நா குழுவினர் உறுதி செய்தனர். 15 பேர் சிமியுலு பகுதியில் இறந்தனர்.

சாவு எண்ணிக்கை மேலும் உயர வாய்ப்புள்ளது. திங்கட்கிழமை ஏற்பட்ட நில நடுக்கம் காரணமாக சில இடங்களுக்கு வாகனங்கள் செல்ல முடியாத நிலை இருந்தது. தற்போது அந்த இடங்களுக்கு ஐ.நா குழுவினர் செல்கின்றனர். அந்த இடங்களில் இறந்தோர் எண்ணிக்கை எவ்வளவு என்பது நேரில் சென்று பார்க்கும் போது தெரியவரும்.

இடிந்து கிடக்கும் கட்டடங்களில் சடலங்கள் உள்ளனவா? யாராவது உயிருடன் இருக்கிறார்களா? என்பதை இந்தக் குழுவினர் தேடுவார்கள். அடுத்த சில தினங்களுக்குப் பிறகே சாவு எண்ணிக்கை பற்றி இறுதியான தகவலாகவே தரப்படும் என்று நிவாரணக் குழுவினர் தெரிவித்தனர்.

2000 பேருக்கும் அதிகமாக இறந்திருப்பார்கள் என ஏற்கனவே அறிவித்தது சரியான தகவலாகவே இருக்கும் என்று துணை அதிபர் யுசுப் சுல்லா புதன்கிழமை கூறினார்.

## ஈராக் சிறைகளில் 10600 பேர் தடுத்து வைப்பு

ஈராக்கிலுள்ள மூன்று நிரந்தர இராணுவ முகாம்களிலும், தற்காலிக சிறைகளிலும் பத்தாயிரத்து அறுநூறு ஈராக்கியர்களை அமெரிக்க இராணுவம் அடைத்து வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகினறது. இது கடந்த ஆண்டு இருந்த எண்ணிக்கையை விட அதிகமாகும். தீவிரவாதிகளுக்கு எதிராக சமீபத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் போது அதிகளவானோர் கைதானது தான் இந்த அதிகரிப்புக்குக் காரணமாகுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்திய-பாக்.பேச்சு வார்த்தை அமெரிக்கா ஆதரவளிக்கும்;

(வோஷிங்டன்)

இந்தியாவும், பாகிஸ்தானும் தமக்கு இடையேயான பிரச்சினைக்குத் தீர்வு காண பேச்சுவார்த்தை மேற்கொள்வதை அமெரிக்கா ஆதரிக்கிறது என்று அதிபர் மாளிகை பத்திரிகைத் தொடர்புத் துறை அதிகாரி ஸ்கார்ட் மெல்லன் நிருபர்களிடம். தெரிவித்தார்.

இந்தியாவுக்கு பாகிஸ்தான் அதிபர் முஷாரப் செல்லவுள்ள நிலையில் இத்தகைய கருத்தை அமெரிக்கா வெளியிட்டுள்ளது.

பேச்சுவார்த்தை முயற்சிகளை அடுத்து இந்தப் பிராந்தியத்தில் பதற்றம் தணிந்து சுமுக நிலைமை உருவாகி வருகிறது. காஷ்மீர் நிலமை இந்தப் பிராந்தியத்தின் நிலமையில் காணப்படும் முன்னேற்றம் காரணமாக இரு நாடுகளுக்கிடையே பதற்றம் தணிந்துள்ளது. பேச்சுவார்த்தை முயற்சியை அமெரிக்கா ஆதரிக்கிறது என்கிறார் மெகல்லன்



ஜப்பானுக்கும், தென் கொரியாவுக்கும் இடையே டோக்டோ என்ற குட்டித் தீவு யாருக்குச் சொந்தம் என்பதில் தகராறு ஏற்பட்டுள்ளது. இந்த குட்டித் தீவுக்கு ஜப்பான் உரிமை கோருவதைக் கண்டித்து தென் கொரியாவின் சியோல் நகரில் ஜப்பான் பிரதமர் கொய்சூமியின் கொடும்பாவியைத் தென்கொரியர்கள் எரித்தனர். பொலிசார் அந்தத் தீயை அணைக்கும் காட்சி

# அமெரிக்கப் பெண்ணின் 15 ஆண்டு மரணப் போராட்டம் முடிந்தது உணவுக் குழாய் அகற்றப்பட்ட 13ஆவது நாளில் உயிர் பிரிந்தது

(வோஷிங்டன்)

15 ஆண்டுகளாக மர்ணத்துடன் போராடிய அமெரிக்கப் பெண்ணின் உயிர் நேற்று முன்தினம் பிரிந்தது. உணவுக்குழாய் அகற்றப்பட்ட 13ஆவது நாளில் அவர் இறந்தார்.

அமெரிக்காவில் புளோரிடா மாநிலத்தில் பினல்லா பார்க் என்ற நகரைச் சேர்ந்தவர் டெர்ரி ஷியாவோ 41 வயதான இந்தப் பெண் ணுக்கு 1990 ஆம் ஆண்டு மாரடைப்பு ஏற்பட்டு மூளை செய லிழந்தது. 15 ஆண்டுகளாக அவர் உயிருக்குப் போராடி வந்தார்.

படுத்த படுக்கையில் வைத்திய சாலையில் இருந்த அவருக்குத் திரவ உணவு குழாய் மூலம் சென்றது.

இந்த நிலையில் டெர்ரியின் கணவர் ஷியோவோ நீதிமன்றில் ஒரு வழக்குத் தொடர்ந்தார். வழக்கில் அவர் எனது மனைவி தினம் தினம் வேதனையுடன் உயிர் வாழ்கிறார். அவரைக் கருணைக் கொலை செய்ய நீதிமன்று அனுமதிக்க வேண்டும் என்று கோரி இருந்தார்.

இதற்கு டெர்ரியின் பெற்றோர் எதிர்ப்புத் தெரிவித்து மற்றொரு மனுவை நீதிமன்றில் தாக்கல் செய்தனர். அதில் எங்கள் மகளின் கணவருக்கும் வேறு ஒரு பெண்ணுக்கும் நட்பு இருக்கிறது. அவர்களுக்கு இரண்டு குழந்தைகளும் உள்ளனர். எனவே தான் டெர்ரியை கருணைக் கொலை செய்ய அனுமதி கேட்கிறார். அவரது கோரிக்கையை ஏற்கக் கூடாது எங்கள் மகள் தொடர்ந்து உயிரோடு இருக்க அனுமதிக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தனர்.

இதைத் தொடர்ந்து மருத்துவர் குழுவினர் டெர்ரியைப் பரிசோதித்து அறிக்கை தாக்கல் செய்தனர்.



அதில் டெர்ரி தற்போதுள்ள நிலையில் இருந்து மீண்டும் நலம் பெற்று சாதாரண பெண்ணாக வாழ முடியாது. இதே நிலையில் வேண்டுமனால் படுக்கையில் வாழலாம் என்று கூறப்பட்டிருந்தது.

இதைத் தொடர்ந்து நீதிமன்று டெர்ரிக்கு உணவு செல்லும் குழாயை அகற்றி விடலாம்: என்று பரபரப்பான உத்தரவை வழங்கியது

இந்த நிலையில் உணவு செல்லும் குழாய் அகற்றப்பட்ட 13ஆவது நாளான நேற்று முன் தினம் டெர்ரி மரணம் அடைந்தார்.

# சர்வதேச சமூகத்திடமும் சிறிலங்கா அரசிடமும்
# பல கோரிக்கைகளை முன்வைத்து பேரணி
## -முல்லை மாவட்ட வெகுசன அமைப்புக்கள் ஏற்பாடு

(புதுக்குடியிருப்பு)


**சிறிலங்கா அரசின் தமிழர் விரோத செயற்பாடுகளைக் கண்டித்தும் பல கோரிக்கைகளை ஐ.நா.சபை உள்ளிட்ட சர்வதேச சமூகத்திடமும் சிறிலங்கா சனாதிபதியிடமும் முன்வைத்தும் முல்லைத்தீவு மாவட்ட மக்கள் மாபெரும் கண்டனப் பேரணி ஒன்றை நடத்தவுள்ளனர்.**

எதிர்வரும் ஆறாம் திகதி நடாத்தப்படவுள்ள இந்தக் கண்டனப் பேரணி *"விடுதலைப்புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தை உடன் கையளிக்க வேண்டும்" *"சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென சர்வதேசத்தில் இருந்து கிடைக்கின்ற உதவிகளை பகிர்ந்தளிக்க பொதுக் கட்டமைப்பை உருவாக்கி அதில் புலிகள் அங்கம் வகிக்க வேண்டும்" என்பன உட்பட பல கோரிக்கை களை முன்வைத்தும் யுத்தநிறுத்த காலப் பகுதியில் சிறிலங்கா இராணுவமும் இராணு வத்துடன் சேர்ந்து இயங்கும் குழுக்களும் விடுதலைப்புலி உறுப்பினர் களையும்பொதுமக்களையும் கொலை செய்வதைக் கண்டித்தும்இடம பெறவுள்ள இப்பேரணியானது, புதுக்குடியிருப்பு மாத்தளன் வீதியில் உதவி அரச, அதிபர் பணிமனைக்கு முன்பாக இருந்தும் புதுக்குடியிருப்பு முல்லை வீதியில் வைத்தியசாலைக்கு முன்பாக இருந்தும் புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான் வீதியில் ஐயனார் கோவிலடியில் இருந்தும் புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியில் பியூஸ் கராச்சடியில் இருந்தும் சமகாலத்தில் ஆரம்பமாகி புதுக்குடி யிருப்புச் சந்தியை வந்தடையும், அங்கு கண்டனக் கூட்டமும், மகஜர் கையளிப்பும் இடம் பெறும் ஐக்கிய நாடுகள் சபை, இந்திய, அமெரிக்கத் தூதுவர்களுக்கும் சிறிலங்கா சனாதிபதி மற்றும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் நோர்வே அனுசரனையாளர் ஊடாக இம்மகஜர் வழங்கப் படவுள்ளது. முல்லை மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியத்தினரும், முல்லை தேசிய எழுச்சிப் பேரவையினரும் இணைந்து இக்கண்டனப் பேரணிக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். இதற்கான முன் ஏற்பாடான முக்கிய கூட்டம் நேற்று முன்தினம் புதுக்குடியிருப் புக்கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் வீ.கனகசுந்தரம் சுவாமி அவர்களின் தலைமையில் இடம் பெற்றது. (08)

## மாதாந்த சந்திப்பு

(முல்லைத்தீவு)

முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் மாதாந்த சந்திப்பு கடந்த புதன்கிழமை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் தலைமையில் நடை பெற்றது. இந்நிகழ்விலு, வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் உட்பட கல்வி மான்கள் புத்தி ஜீவிகள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர். (08)



முல்லை. மாவட்ட அன்னையர் முன்னணியினரால் வறுமைக்கோட்டுக்கு உட்பட்டவர்களுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கும் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் காலை புதுக்குடியிருப்பில் உள்ள மாவட்ட அரசியல் துறைச் செயலகத்தில் இடம் பெற்றது. இதில் அன்னையர் முன்னணியின் பொருளாளர் சி.கமலநாயகி தையல் இயந்திரம் ஒன்றை பயனாளி ஒருவருக்கு வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்: க.தவரட்ணம்

## மேலுமொரு கூட்டுறவுக்கிளையை திறக்க மக்கள் கோரிக்கை

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவு உண்ணாப்புலவு இடைத்தங்கல் முகாமில் வசிக்கும் மக்களின தேவைகளை நிறைவு செய்ய ஒரு கூட்டுறவுக்கிளை மட்டும் போதாது மேலுமொரு கிளையைத திறந்து சேவையை விஸ்தரிக்குமாறு அம்முகாம் மக்கள் கேட்டுள்ளனர்.

உண்ணாப்புலவு இடைத்தங்கல் முகாமில் வடக்கு தெற்கு என இரண்டாகப் பிரித்து மொத்தம் 525 குடும்பங்கள் வாழ்கின்றன. இவர்களுக்கென்று ஓரே ஒரு கிளை மூலம் மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாது நெருக்கடியின் மத்தியில் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதனைக் கருத்தில் கொண்டு அம்முகாமிற்கு இன்னுமொரு சங்கக் கிளையினை அமைத்துத் தரும்படி மக்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேட்டுள்ளனர். (கு)

## த.பு.கழகத்துடன் இணைந்து செயற்பட அமெ.நிறுவன பிரதிநிதிகள் விருப்பம்

(அலுவலக செய்தியாளர்)

மட்டக்களப்பு தமிழர் புனர்வாழ்வுக் கழக அலுவலகத்திற்கு அமெரிக்க Room to Reads Mission என்னும் நிறுவனத்தைச் சார்ந்த சிரேஷ்ட உத்தியோகத்தர்களான எறின் கிவோன் கஞ்சு, மீறா பத்மராஜா ஆகிய இருவர் அண்மையில வருகைதந்துள்ளனர். இவர்கள் மட்டக்களப்பு தமிழர் புனர்வாழ்வுக் கழக பொறியியலாளரான சஞ்சையை சந்தித்து உரையாடியுள்ளனர்.

இவ்கள் மட்டக்களப்பு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் தாங்களும் இணைந்து செயற்படப்போவதாக விரும்பம் தெரிவித்துள்ளனர். அத்தோடு மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்பள்ளிகள் மற்றும் வாசிகசாலைகள், விளையாட்டு மைதானங்கள் ஆகியவற்றை அமைப்பதற்குரிய உதவிகளைச் செய்வதற்கு தகுந்த இடங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றிற்கான செலவு மதிப்பீட்டுப் பட்டியலைத் தயாரித்துத் தரும்படியும் சஞ்சையிடம் கேட்டுள்ளனர். இதற்கிடையில் தங்களது சேவை அம்பாறை மாவட்டத்தில் தற்பொழுது நடைமுறைப் படுத்தப்பட்டு வருவதாகவும் இச்சந்திப்பின் போது அவர்கள் தெரிவித்தனர். (கு)

## சுனாமியால் உயிரிழந்த ஆசிரியர்,மாணவர்களுக்கு யா/மருதங்கேணி இ.த.க.வில் அஞ்சலி நிகழ்வு

(அலுவலக செய்தியளர்)

சுனாமிப் பேரலையில் சிக்கி உயிரிழந்த ஆசிரியர் மற்றும் மாணவர்களின் நினைவாக யா/மருதங்கேணி இ.த.க பாடசாலை சமூகத்தினர் அஞ்சலி நிகழ்வினை நடாத்தினர்.

மருதங்கேணி இ.த.க பாடசாலையில் கல்விகற்பித்து சுனாமி அலையில் சிக்கி உயிரிழந்த இரண்டு ஆசிரியைகளையும், அப்பாடசாலையில் கல்விகற்று இச்சம்பவத்



தில் உயிரிழந்த 28 மாணவர்களையும் நினைவு கூர்ந்து இந்த அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. அப்பாடசாலையின் அதிபர் , ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோரது ஒழுங்குபடுத்தலில் வித்தியாலய வளாகத்தில் நேற்று முன்தினம் காலை 9.00 மணிக்கு நிகழ்வு இடம் பெற்றது.

இங்கு உயிரிழந்த ஆசிரியர்கள், மாணவர்களின் உருவப்படங்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன. இந்நிகழ்வில் பொதுச்சுடரினை வடமராட்சிகிழக்கு கல்விக் கழக பொறுப்பாளர் அண்ணாத்துரை ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக்கொடியினை தமிழீழ கடற்படையின் வடமராட்சி கிழக்கு அரசியல் துறைப் பொறுப்பாளர் நிலவன் ஏற்றினார். அங்கு வைக்கப்பட்டிருந்த ஆசிரிய, மாணவர்களின் உருவப்படங்களுக்கு அவர்களின் உறவினர்கள் மலர் மாலைகளை அணிவித்து நினைவுச் சுடர்களை ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து மலர் வணக்கத்தினை தமிழீழகடற்படையின் யாழ். மாவட்டத் தளபதி சலீம் அவர்கள் ஆரம்பித்து வைக்க, தொடர்ந்து அங்கு வருகைதந்திருந்த அனைவரும் மலர் வணக்கம் செலுத்தினர். இங்கு நினைவுரைகளை தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் இளங்குமரன், போராளி தாயகன் , வடமராட்சி கிழக்கு கோட்டக்கல்வி அதிகாரி பா.ரகுநாதன் , வடமராட்சிகிழக்கு மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் ஆகியோா நிகழ்த்தினர். இங்கு பாடசாலை சமூகத்தினரால் வெளியிடப்பட்ட அஞ்சலிப் பிரசுரத்தினை ஆசிரியை ஜெயரூபி அவர்கள் வாசித்தார். தொடர்ந்து பாடசாலை மாணவர்களினால் அஞ்சலி நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. இந்நிகழ்வில் அரச , அரசசார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் போராளிகள், துறைசார் பொறுப்பாளர்கள், பொது மக்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (ச.தீ)



**பூநகரி கௌதாரி முனை அ.த.க பாடசாலையில் அண்மையில் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நடைபெற்றது.**

**யுனிசெப் நிதியுதவியுடன் 40X16 அடி கொண்ட பாடசாலைக்கான புதிய கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டதோடு, மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. இதில் அடிக்கல்லை பூநகரிவாடியடி தேவாலயத்தின் பங்குத் தந்தை நாட்டி வைத்தார். (05)**

## அமெரிக்க குடிநீர் சுத்திகரிப்புக்குழு த.பு க. மாவட்டப் பணிப்பாளருடன் சந்திப்பு

(அலுவலக செய்தியாளர்)

அமெரிக்காவிலிருந்து மட்டக்களப்பிற்கு விஜயம் செய்த யோசப்ரெல் கொட் என்பவர் தலைமையிலான குழு தமிழர் புனர்வாழ்வுக் கழக மாவட்டப் பணிப்பாளரைச் சந்தித்து சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களின் குடிநீர் தொடர்பான பிரச்சினைகளைக் கேட்டறிந்தார்.

சுனாமிப் பேரலையினால் பாதிப்புற்ற மக்களுக்கு சுத்தமான குடிநீரைப் பெறுவதிலுள்ள குறைபாடுகளை நிவர்த்திசெய்யும் வகையில் அவரால் கொண்டுவரப்பட்ட நீர் சுத்திகரிப்பு இயந்திரம் ஊரியன் கட்டு, கதிரவெளி ஆகிய பிரதேசங்களில் முகாம்களில் வாழும் மக்களின் குடிநீர்ப்பிரச்சினையைத் தீர்க்கும் பொருட்டு பொருத்தப்பட்டுள்ளது. தமிழர் புனர்வாழ்வுக்கழகத்துடன் இணைந்து இவர்கள் தமது பணியினை மேற்கொண்டுள்ளனர்.

இதற்கிடையில் மட்டக்களப்பு தமிழர் புனர்வாழ்வுக் கழக அலுவலகத்திற்கு லண்டனில் இருந்து பீற்றர் குயினி என்பவரும், அவுஸ்திரேலியாவிலிருந்து மார்ட்டின், கத்தரின் ஆகிய இருவருமாக வருகைதந் துள்ளனர். இவர்களுள் மார்ட்டின் என்பவர் நில அளவையாளராவர். இவர் மட்டக்களப்பு மாவட்ட திராய்மடு என்னுமிடத்தில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிரந்தர வீடமைப்பு வேலைத் திட்ட முன்னேற்பாடான செயற்பாடுகளுடன் ஒன்றிணைந்து செயலாற்றிக் கொண்டிருக்கின்றார். அவருடன் வருகைதந்த தாதியரான கத்தரின் என்பவர் அமெரிக்காவிலிருந்து வருகைதந்த மருத்துவக் குழுவினருடன் இணைந்து செயற்பட்டுவருகின்றார். இவர்கள் தமிழர் புனர்வாழ்வுக்கழக மருத்துவப் பிரிவினருடனும் இணைந்து மருத்துவ சேவைகள தொடர்பான பணிகளில் ஈடுபட்டுவருவதும் குறிப்பிடத்தக்கது. (கு)

## இலங்கையில் அரிசிமாப் பாண் உற்பத்தி செய்ய உத்தேசம்

(வவுனியா செய்தியாளர்)

இலங்கையில் முதன் முறையாக அரிசி மாவைப் பயன்படுத்தி பாண் உற்பத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் கோதுமைமாவின் விலை அதிகரித்து வருதாலும் அரிசிமா உற்பத்தியை அதிகரிக்க வேண்டியுள்ளதாலும், இவ் அரிசிமாப் பாண் உற்பத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. விவசாய அமைச்சு ஜப்பானிய தொழில் நுட்பத்துடன் தயாரிக்கவுள்ள இவ் அரிசி மாப் பாண், சிவப்பு அரிசி மாப் பாண், வெள்ளை அரிசிமாப் பாண் என இரண்டு வகையாக உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. (10)

## அன்னை பூபதி நினைவாக மாங்குளத்தில் சிரமதானம்

(நமது நிருபர்)

அன்னை் பூபதிநினைவு நாளை முன்னிட்டு மாங்குளத்தில் நேற்று முன்தினம் சிரமதானப்பணி இடம்பெற்றது.மாங்குளத்திலுள்ள கரும்புலி லெப்.கேணல் போர்க் நினைவாலயம் முன்பாக இச் சிரமதானப்பணி நடைபெற்றது. மாங்குளம் வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி திருமதி. அழகேந்திரன் யோகராணி தலைமையில் மாதர் சங்க உறுப்பினர்கள் பெருமளவானோர் இச் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.இதேவேளை அன்னைபூபதியின் நினைவாக நேற்று முன்தினம் இத்தாவில் கிராமத்திலுள்ள ரஞ்சித் முன்பள்ளியில் ஊரக தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் மக்களால் சிரமதானப்பணி மேற்கொள்ளப்பட்டது.

# கிழக்குப் படுகொலைகளைக் கண்டித்து புதன்கிழமை நல்லூரில் மாபெரும் பேரணி

-யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**கிழக்கில் போராளிகள் மீதும் தமிழ்ப் பொதுமக்கள் மீதும் நடத்தப்படும் தாக்குதல்களையும், படுகொலைகளையும் கண்டித்து யாழ்ப்பாணத்தில் மாபெரும் பேரணி ஒன்று எதிர்வரும் புதன்கிழமை நடத்தப்படவுள்ளது.**

யாழ்.நல்லூர்க் கோட்டத்தில் உள்ள அனைத்து பொது அமைப்புக்களும் இணைந்து இப்பேரணியை நடத்தவுள்ளன.

நல்லூர் ஆலய முன்றலில் இருந்து ஆரம்பிக்கும் இப்பேரணி போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகம் வரை சென்று முடிவடையும் அங்கு வைத்து கண்காணிப்புக்குழு மாவட்டத் தலைவரிடம் கோரிக்கை மகஜர் கையளிக்கப்படும்.

யாழ்.குடாநாட்டில் இடம்பெயர்ந்து வாழும் மக்களை மீள அவர்களின் இடங்களில் குடியேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தும் இப்பேரணி நடத்தப்படவுள்ளது என யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் அறிவித்துள்ளது.

# தென்மராட்சியில் உவர்நீர் தடுப்பு அணைகள் உடன் அமைக்கும்படி வேண்டுகோள்

– சூழல் பாதுகாப்பு அமைப்புகள் விடுத்தன

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் கடல் நீர் உட்புகாமல் தடுப்பதற்கு உவர்நீர் தடுப்பு அணைகள் அமைக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென சூழல் பாதுகாப்பு அமைப்பு வேண்டு கோள் விடுத்துள்ளது.

கைதடி, நாவற்குழி, கோயிலாக் கண்டிப் பிரதேசங்களில் கடந்த பல வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்டிருந்த இவ்வணைகள் கடந்த கால யுத்த நடவடிக்கைகளால் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன.

இவ்வணைகள் மீள் புனரமைப்புச் செய்யப்பட்டு உவர் நீர் மக்கள் வாழும் பிரதேசங்கங்களுக்குள் உட்புகாமல் தடுக்க மிகவிரைவாக தடுப்பு அணைகள் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

இல்லையேல் இப்பகுதி விளைநிலங்கள் உவர்நிலமாக மாறி காலப் போக்கில் விவசாயம் செய்யமுடியாத நிலை ஏற்படும் என சூழல் பாதுகாப்பு அமைப்பு தெரிவித்துள்ளது (28)

# உலகவங்கியின் நிதியுதவியுடன் 800 வீடுகள் அமைக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் உலக வங்கியின் நிதியுதவியுடன் 800 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

கடந்தகால யுத்த அனர்த்தங்களால் வீடுகளை இழந்த வறிய குடும்பங்களுக்கே இந்த 800 வீடுகளும் புதிதாக நிர்மாணித்துக் கொடுக்கப்படவுள்ளது.

வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் குடும்பங்களின் நலனைக் கருத்தில் கொண்டு அமைக்கப்படவுள்ள வீடுகள் ஒவ்வொன்றும் தலா 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதி கொண்டவையாக இருக்குமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது (33)

-யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில்-

# ஆங்கில மொழிமூல பாடங்களுக்கு விரிவுரையாளர்கள் பற்றாக்குறை!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆங்கில மொழிமூலப் பாடங்களைப் போதிப்பதற்கு தகுதியான விரிவுரையாளர்களுக்குப் பற்றாக்குறை நிலவி வருகிறது.

யாழ்ப்பாணம் தேசியகல்வியியற் கல்லூரியில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களைப் பயிலும் ஆசியமாணவர்களுக்கு ஆங்கில மொழிமூலத்தில் அப்பாடங்களைப் போதித்துப்பயிற்றுவிப்பதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

எனினும் இவ்விருபாடங்களையும் ஆங்கில மொழிமூலத்தில் கற்பிப்பதற்கான விரிவுரையாளர்களுக்குப் பற்றாக்குறை நிலவி வருவதால் இப் பாடங்களைப் பயிலும் ஆசிரியமாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (33)

# நியாப் திட்டத்தின் மூலம் 25 கிராமங்கள் புனரமைப்பு

நியாப் திட்டத்தின் கீழ் இவ்வாண்டு குடாநாட்டிலுள்ள 25 கிராமங்கள் புனரமைப்பு செய்யப்படவுள்ளன.

உலக வங்கியின் நிதி உதவியுடன் நியாப் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படவுள்ள இந்த 25 கிராமங்களிலும் குளப்புனரமைப்பு, வீதிப்புனரமைப்பு, குடிநீர் வசதிகளை ஏற்படுத்தல், சுயதொழில் ஊக்குவிப்பு என்பன மேற்கொள்ளப்படவுள்ளன. (33)

# திறன் அபிவிருத்தி உதவியாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

திறன் அபிவிருத்தி,வாழ்க்கைத் தொழில், தொழில்நுட்பக்கல்வி அமைச்சின் கீழ் திறன் அபிவிருத்தி உதவியாளர்கள் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கு தேகாரோக்கியமுள்ள 18 தொடக்கம்45 வயதுக்குட்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் யாவும் செயலாளர், திறன் அபிவிருத்தி வாழ்க்கைத் தொழில்,தொழில்நுட்ப அமைச்சு,நிபுணதாமியச354/2 எல்விட்டிகல மாவத்தை,கொழும்பு5 என்ற முகவரிக்கு எதிர்வரும் ஐந்தாம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

# ரஷ்ய புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பம் கோரல்

கல்வி அமைச்சின் உயர்கல்விப் பிரிவின் கீழ் ரஷ்யக்குடியரசினால் வழங்கப்படவுள்ள பட்டப்பின் படிப்புப் புலமைப் பரிசில்களுக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்புலமைப்பரிசில் பெறுவதற்குப் பொறியியல் விஞ்ஞானம், விவசாயம், மொழியாராய்ச்சி என்பன தகுதியுடையன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தகுதியுள்ளோர் செயலாளர், கல்வி அமைச்சு உயர்கல்விப்பிரிவு, இல-18, கொழும்பு-7 என்ற முகவரிக்கு இம்மாதம் 18ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது. (33)

# ஆடியபாதம் வீதியில் சன நெருக்கடி அதிகம்

— விபத்துக்களும் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருநெல்வேலி பொதுச் சந்தைப்பகுதியை அண்டியுள்ள ஆடியபாதம் வீதியில் தினமும் காலை முதல் நண்பகல்வரை சனநெருக் கடிஅதிகரித்துக் காணப்படுகிறது.

மேற்படி சந்தைக்கு வரும் பொது மக்கள் வீதி ஓரங்களில் தமது வாகனங்களை நிறுத்துவதாலும், சந்தைக்கு வரும் வியாபாரிகள் வீதி ஓரங்களில் வாகனங்களை நிறுத்தி விட்டு வீதி ஓரங்களில் வைத்தே பொருட்களை விற்பனை செய்து வருவதாலுமே இப்பகுதியில் நெருக்கடி நிலை அதிகமாகக் காணப்படுகிறது.

இதனால் இப்பகுதியில் அடிக்கடி வீதி விபத்துகளும் அதிகரித்திருக்கின்றன. (33)

# ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் உளவளத்துணைப் பயிற்சி

(வடமராட்சி)

யாழ்.வடமராட்சி கிழக்குப்பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தவர்களுக்கு உளவளத் துணைகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நடவடிக்கைகளில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் ஈடுபட்டு வருகிறது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் உளத்தாக்கங்களைப் போக்கி அவர்களின் மனநிலையில் நிமமதியை ஏற்படுத்துவதற்காகவே ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் இந் நடவடிக்கை எடுத்துள்ளது.அந்த அடிப்படையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உளவள பயிற்சிகளை இந்நிறுவனத்தினர் மேற்கொண்டு வருகின்றனா (33)

# கண்ணாடிப்பிட்டி மயானம் நவீனமுறையில் புனரமைப்பு

(தென்மராட்சி)

சாவகச்சேரி நகர பொது மயானமான கண்ணாடிப்பிட்டி மயானம் நவீன முறையில் புனரமைக்கப்படவுள்ளது.

கடந்த கால யுத்த அனர்த்தம் காரணமாக கடுமையாகப் பாதிப்புற்றிருந்த இந்த மயானத்தை நவீன முறையில் புனரமைப்பதற்காக பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் மற்றும் நகரசபைச் செயலாளர் பல்வேறு அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட விசேட கூட்டம் அண்மையில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் மயாணம் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டு, பாழைடைந்து போயுள்ள மயானக் கிணற்றை புனரமைப்பதுடன் இடிந்த நிலையிலுள்ள சுற்றுமதிலை திருத்தி அமைத்து யாழ். குடாநாட்டிலேயே நவீன மயானமாக இந்த நகர மயானத்தை உருவாக்க அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவதென முடிவெடுக்கப்படடது மேலும் நகர நீர் வழங்கல் மூலமாக மயானத்திற்கு வசதிகளை ஏற்படுத்தவும் இணக்கம் காணப்பட்டது (28)

# "நோர்வேஜியன்" உதவியுடன் இயந்திரம் திருத்தும் நிலையம்

(வடமராட்சி)

யாழ். வடமராட்சியில் உள்ள தும்பளையில் "நோர்வேஜியன்" என்ற நோர்வே நாட்டைச் சேர்ந்த சர்வதேச அரசசார்பற்ற தொண்டர் நிறுவனத்தின் 25 மில்லியன் ரூபா நிதியுதவியுடன் படகு இயந்திரங்களைப் பழுது பார்க்கும் நிலையம் ஒன்று திறக்கப்படவுள்ளது.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட இப்பகுதி கடற்றொழிலாளர்களது கடற்றொழில் படகுகளின் இயந்திரங்களை இலவசமாகத்திருத்திக் கொடுப்பதற்காகவே இப்படகு இயந்திரம் திருத்தும் நிலையம் அமைக்கப்படவுள்ளது. (33)

# "செவ்விளக்கு" ஆற்றுகை நாடகம் வடமராட்சியில் அரங்கேற்றம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிப் பிரதேசத்தில் "செவ்விளக்கு" ஆற்றுகை நாடகம் இம்மாதம் முற்பகுதியில் நடத்தப்படவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட நுண்கலைத்துறையினரின் வழிப்படுத்தலில் நாடகமும் அரங்கியலும் மாணவர்களினால் இது அரங்கேற்றப்படவுள்ளது.

இந்த நடவடிக்கைகளுக்கான சகல ஏற்பாடுகளும் தற்போது நடைபெற்று வருகின்றன.

# மின்சார வசதிகள் இல்லை

(தென்மராட்சி)

தென்மராட்சி கரம்பைக்குறிச்சி மக்கள் தமக்கு மின்சார வசதிகள் செய்து தரப்பட வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதன் அயல் கிராமங்கள் பல மின்சார வசதிகள் பெற்றுள்ள போதிலும் இக்கிராமத்திற்கு மின்சார வசதிகள் இதுவரை செய்து கொடுக்கப்படவில்லை.

இது குறித்து இக்கிராம பொது அமைப்புக்கள் பல்வேறு தரப்பினரிடமும் கோரிக்கை விடுத்துள்ள போதிலும் இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை இதில் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென இக்கிராமமக்கள் கோரியுள்ளனர். (28)

# ஆற்றுப்படுத்தல் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் பல்வேறு உளத்தாக்கங்களால் பாதிக்கப்பட்டுள்ள இளைஞர் யுவதிகளை ஆற்றுப்படுத்தும் வாழும் கலைப் பயிற்சி இன்று முதல் எதிர்வரும் 7 ஆம் திகதி வரை அரசடி விநாயகர் ஆலய வீதியில் அமைந்துள்ள விநாயகர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.(28)

# முறையீடு செய்யலாம்

யாழ். மாவட்டத்திலுள்ள வெதுப்பகங்களில் தயாரிக்கப்படும் பாண்களின் நிறை மற்றும் விலை, தரம் போன்றவற்றில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தில் முறையிடலாம் என அச்சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.வெதுப்பக உரிமையாளர்களின் நடவடிக்கைகள் தொடர்பாகவும், பாணின் நிறை மற்றும் விலை தொடர்பாக உள்ள குறைபாடுகளால் நுகர்வோர் பாதிக்கப்படுவதைத் தடுக்கவே இவ் அறிவிப்பு விடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)-

# இரத்தத்தில் வெள்ளை அணுக்களின் எண்ணிக்கையும் நோய்களும்

ஒரு பெண்ணின் இரத்தத்திலுள்ள வெள்ளை அணுக் களின் எண்ணிக்கையை கணக்கிடுவதன் மூலம் அவருடைய நோய் எதிர்ப்புத் தன்மை எப்படி இருக்கிறது என்பது மாத்திரம் தெரிவதில்லை. கூடுதலாக இருதய நோய் ஆபத்தும் எப்படி



இருக்கிறது என்ற உண்மையும் கிடைக்கும் என்கிறார்கள் நிபுணர்கள்.இருதய நோய் ஆபத் தைகண்டு பிடிக்க எத்தனையோ சிகிச்சை முறைகள் உள்ளன. ஆனால் இந்த சோத னைகளில் உண்மை தெரிய வராத பட்சத்திலும் வெள்ளை அணுக்கள் சோதனை உண்மையை தெளிவாக படம் பிடித்துக் காட்டி விடும்.

இரத்த வெள்ளை அணுக்களின் எண்ணிக்கை குறைவாகக் காணப்படும் பெண்களைக் காட்டிலும் அதிகமாக இருக்கும் பெண்கள் இருதய நோய்களால் உயிரிழக்க இரண்டு மடங்கு கூடுதல் வாய்ப்பு இருப்பதாக ஆய்வா ளர்கள் கூறுகின்றார்கள். இருதய நோய்களின் இதர காரணிகளான கொலஸ்ரோல், புகைப் பழக்கம், நீரிழிவு, கூடுதல் எடை மற்றும் உயர் ரத்த அழுத்தம் ஆகியவற்றை கணக்கில் எடுத்துக் கொண்டு பார்த்தாலும்கூடஇது சாத்தியமாகும். என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ரத்த வெள்ளை அணுக்கள் நமது உடம் புக்குள் புகும் நோய்க் கிருமிகளையும், நோய் களையும் எதிர்த்துப் போராடி அழிக்கும் சக்தி கொண்டவை. தொற்று நோய்கள் மற்றும் கிருமி களுக்கு தகுந்தபடி உடம்பின் நோய் எதிர்ப்பு மண்டலம் கூடுதலான வெள்ளை அணுக்களை வெளிப்படுத்தும்.

# புதிய கருவி



இதுவரை பாவனையிலிருந்து வரும் வீட்டின் தளத்தை சுத்தி கரிக்கும் கருவியை விட அதிநவீன கருவியை அமெரிக்கா தயாரித் துள்ளது.

இக்கருவியை சுத்திகரிப்பில் ஈடுபடுத்தும்போது தூசுகள் அடைந்து விடும் போது தன்னியக்கத் தொழிற் பாட்டின் மூலம் அதனை ஒதுக்கி விட்டு மீண்டும் செயற்படும் அத்துடன் குறித்த நேரத்தில் அவ்வாறு செய்து முடிப்பதும் இதன் விசேட அம்சமாகும்.

# டி.வி.பார்ப்பதால் இளசுகளின் குணாதிசயங்களில் மாற்றம்

பாலியல் சம்பந்துமான தொலைக் காட்சி நிகழ்ச்சிகள் அதைப்பார்க்கும் 12.17 வயதுடையவர்களிடம் பெரும் பாதிப்பை-ஏற்படுத்துகின்றன. அமெ ரிக்காவில் 1,792 பேரிடம் ஓராண்டு நடத்தப்பட்ட ஆய்வில் இது தெரிய வந்துள்ளது.

அங்குசராசரியாக 3.00 மணி நேரம் டி.வீ.பார்க்கின்றனர் இந்த இளசுகள் டி.வீகளில் நகைச்சுவை உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் பாலியல் தொடர் பானவையாக இருக்கின்றன.

இதனால் டிவிபார்க்காமல் இருப் பவர்களை விட டி.வீ பார்ப் பவர்களுக்கு உணர்வுகள் அதிகப் படியாகத் தூண்டப்படு கின்றன.

இதையடுத்து பல்வேறு விதமானசெயல்களில் அவர்கள் ஈடுபடுகின்றனராம் மூன்று ஆய்வில் இது உறுதி செய்யப்பட் டுள்ளது. மேலும் டி.வீயில் பார்ப் பதைப் போன்றே அவர்களது செயல்களும் இருப்பது கண்டறியப் பட்டுள்ளது.

# பொன் மொழிகள்

மற்றவர்களிடம். நல்ல விஷயத் தைப்பாருங்கள் ஆனால் முகத்தைப் பார்க்காதீர்கள். (பேகன்)

உங்கள் முகத்தால் உங்களை எடை போட்டுவிடலாம்.(தோமஸ் ஜெபர்சன்)

செல்வம் சேருமிடத்தில் மனிதர்கள் சேர்ந்தி ருப்பார்கள்.(ஒலிவ் கோல்ட் ஸ்மித்)

உன்னை விட அதிஷ்ரம் வந்த வனிடம் உன் இன்பத்தைப் பற்றிப் பேசவேண்டாம். (புளூடார்க்)

இயலாது என்றவார்த்தை என் அகரா தியில்கிடையாது. (நெப்போலியன்)

வெளிச்சத்தை அடைய விரும் புபவர்கள் தம் பெற்றோரை மகிழ் விக்கவும். (நபி)


இரு மனிதர்களுக்கிடையிலுள்ள இடைவெளியைப் புன்னகை குறைக் கின்றது. (லாங்பெல்லோ)

# வேர்க் கடலை

வேர்க்கடலையில் உயர் அளவில் புரதச்சத்து இருப்பதோடு ஆண்ட்டி ஆக்சிடாண்ட் எனப்படும் இரசாயனப்பொருட்களும் நிறைந்து உள்ளன. இந்த இரசாயனங்கள் புற்றுநோய் மற்றும் இருதய நோய் கள் வராமல் தடுக்கும் ஆற்றல் உடையவை. உடல் செல்களை இந்த நோய்கள் பாதிக் காதபடி இவை பாதுகாக்கின்றன. ஸ்ரோபறி போன்றவற்றில் நிறைந்துள்ள தைப் போலவேர்க்கடலையிலும் இது அதிகமாக உள்ளன. சிவப்பு மற்றும் மஞ்சள் பழங்கள், காய் கறிகளில் இந்த குறிப்பிட்ட ரசா யனப் பொருட்கள் அதிகம் உள்ளன. அது போல வேர்க்கடலையை வறுப் பதால் ரசாயனத்தன்மை மேலும் அதிகரிக்கிறது. எனவும் புதிய ஆய்வில் தெரியவந்துள்ளது.

# கையடையாளத்தைப் பதிய வங்கிகளில் நவீன கருவி

பணக்கொடுக்கல் வாங்கல்களின் போது புதிய நடைமுறைகளை கையாண்டு மோசடிகளைத் தவிர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றில் ஒன்றே கிரடிட் காட்முறையாகும். எனினும் இந்த முறைகளிலும் மோசடிகள் ஏற்படவே செய் கின்றன. இதனால் பணம் செலுத்துவோரும் கொள்வோரும் பெரும் பாதிப் படைகின்றனர்.



அவற்றைத் தடுக்கும் முகமாக ஜேர்மன் கிரடிட் கார்ட்டுக்குப் பதிலாக கை அடையாளங்களைப் பதிவு செய்யும் நவீன கருவிஒன்றை அமுல்படுத்தியுள்ளது. ஆரம்பத்தில் அதாவது கணக்கொன்றை ஆரம்பிக்கும் ஒருவரிடம் இருந்து கைரேகை பெற்றுக் கொள்ளப்பட்டு பதிவு செய்து வைத்திருக்கும் இக் கருவி பின்னர் வைப்பிலிட அல்லது மீளப்பெற சம் பந்தப்பட்டவர் வரும்போது கைரேகை பெறப்பட்டு இதனுடன் ஒப்பிடப்பட்டு உறுதி செய் யப்படுகிறது.

# தைரொய்ட் கோளாறு

தைரொய்ட் பிரச்சினை குடும்பத்தி னருக்கு யாருக்காவது இருக்கிறதா? என்று அறிந்து கொள்வது நல்லது. சிலகுடும்பங்களில் பரம்பரையாக இப் பிரச்சினை தொடர்வது உண்டு. அப்படியிருந்தால் தைரொய்ட் கோளாறுக்கான அறிகுறிகள், உடல் பருமன் ஆகியவை ஏற்படும் அவ்வாறு ஏற்பட்டால் இரத்த பரிசோதனையில் TSH மாற்றம் உள்ளதா? என்று அறிந்து சிகிச்சை பெறுதல் நலம். உடலில் வெண் புள்ளிகள் இருந்தால் தைரொய்ட் பரிசோதனை அவசியம்தேவை. ஏனென் றால் பலருக்கு தைரொய்ட் கோளாறு மிதமாக இருந்தாலே வெண்புள்ளிகளை உருவாக்கி விடுகிறது. உடற் பருமன் அதிகமானால் இரத்த அழுத்தம் அதிக மாகும். கொலேஸ்ரோல் அதிகமாக வரு கிறது. சர்க்கரை (நீரிழிவு)வியாதி வரவும் வாய்ப்புகள் அதிகம். மூட்டு வலி இருக்கிறது என்று உடற்பயிற்சியை தவிர்க்கவேண்டாம்.சைக்கிள் ஓட்டுதல், நீச்சல் என்று முயற்சி செய்யுங்கள், மூட்டுக்களை பாதிக்காது. பாலுணர்வில் கோளாறு என்று தோன்றினால் ஆண்-பெண் இருபாலரும் தைரொய்ட் டெஸ்ட் செய்து கொள்வது அவசியம் ஏனென்றால், இதுவும் ஒரு தைரொய்ட் பிரச்சினையாக இருக்கக்கூடும். சாதா ரணமாக கழுத்தில் கட்டி இருக்கிறது என்று கழுத்தைப் பார்த்து பீதி அடைய வேண்டியதில்லை. அண்ணார்ந்து பார்த் தபடி தண்ணீரைக் குடியுங்கள், வீக்கம் இருந்தால் கட்டி மேலும் கீழும் அசை யும், மேலும் ஐயம் இருந்தால் மருத்து வரை நாடுங்கள்.

# கல்லீரல் புற்று நோயை குணப்படுத்த புதியமரபணு

கல்லீரல் புற்றுநோயை குணப் படுத்தும் புதிய மரபணுவை ஹொங் கொங் விஞ்ஞானிகள் அடையா ளம் கண்டுள்ளனர். இந்த குறிப் பிட்ட மரபணுவுக்கு DLC-2 என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இந்த மரபணுக்கள் கல்லீரல் புற்று நோய்ச் செல்களைத் தாக்கி நோயைக் குணப்படுத்துகிறது. ஆரோக்கியமான மனிதர்களிடம் மட்டுமே காணப்படும் இந்த மரபணுக்கள், கல்லீரல் புற்று நோயாளியிடம் காணப்படுவ தில்லை.

இந்த புதிய மரபணுவின் செயற் பாடுகள் பற்றி தீவிரமாக ஆராயப்பட்டு வருகின்றது. இதன் முடிவில் கல்லீரல் புற்றுநோய்க்கு தற்போதுள்ள சிகிச்சை முறையில் தேவையான மாற்றங்களை செய்து புதிய சிகிச்சை முறையை விரை விலேயே உருவாக்க முடியும் என்று விஞ்ஞானிகள் நம்புகிறார்கள். புதிய தொரு சிகிச்சை முறை கண்டு பிடிக்கப் படும் பட்சத்தில் தற்போதைய கீமோ தெரபி சிகிச்சையில் புதிய புரட்சி ஏற் படும் என்று கருதப்படுகிறது.

# அதிவேக ஐ.பி.எம் புளூஜீன் கணினி

உலகிலேயே மிக அதிவேக கணினி என அழைக்கப்படுவது-ஐ.பி.எம். புளூஜீன்' கணினி ஆகும். வினாடிக்கு ஒருலட்சத்து பத்துக் கோடி கணக்குகளை போட்டு முடிக்கும் ஆற்றலை நிரூபித்து புதிய உலக சாதனை படைத்து ள்ளது.

அமெரிக்காவில் உள்ள லாரன்ஸ் லிவர்மோர் தேசிய சோத னைச்சாலைக்காக இது இயக் கப்பட்டு வருகிறது. உலகின் முதல் 500 அதிவேக கணினிகளில் முதலிடம் பிடித்து உள்ளது. இப்போது வினாடிக்கு 135.5 ரொபிளாப் வேக அளவை எட்டி உள்ள இந்தக் கணினிஇதன் உச் சகட்ட ஆற்றலாக வினாடிக்கு 360 ரொபிளாப்புகளை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சுனாமி போன்ற இயற்கை நிகழ்வு களை கணக்கிடுவது, நுண் அணுக்க ளை ஆராய்வது, விமான நிலைய தரைத்தள போக்கு வரத்துக்களைக் கண் காணிப்பது, வர்த்தக சிக்கல் களை தீர்ப்பது போன்ற பல காரியங்களுக்கு சூப்பர் கணினி பயன்படுகிறது.

# தரம்-05 உயர்ச்சிக்கு அத்திவாரமிடும் புலமைப்பரிசில் ஆசிரியர் பணி

**கிளி/திருவையாறு மகாவித்தியாலயத்தில் தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களிற்கு கல்வி கற்பித்து கிளிநொச்சி மாவட்டத்தில் கணிசமான மாணவர்களைச் சித்தியடைய வைப்பதில் தனக்கென ஒரு தனி இடத்தைப் பெற்றவரான ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி. சிவபாக்கியம் நடராசா அவர்களுடனான சந்திப்பு.**

அர்ப்பணிப்பு நிறைந்த அற்புதப்பணி ஆசிரியபணி பல்வேறு மாறுபட்ட இயல்பு நிலைகளிலிருந்து வருகின்ற மாணவர்களை ஒருநிலைப்படுத்தி அவர்களுக்கு எந்த முறையில் கற்பித்தலை மேற்கொண்டு மாணவர்களை தேர்ச்சியடைய வைப்பது என்பது சுலபமானதொன்றல்ல.

இப்படிப்பட்ட ஒரு உயரிய சேவையைப் பல ஆண்டுகளாக தொடர்ச்சியாக செய்து வரும் கிளிநொச்சி மாவட்ட திருவை



1993ஆம் ஆண்டு சித்திபெற்ற மாணவர்களுடன் ஆசிரியை

யாறுப்பகுதியைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி. சிவபாக்கியம் நடராசா அவர்களின் கற்பித்தல் பணியின் வெற்றி பற்றி அறிந்து அவரைச் சந்தித்தோம்.

கிளி/திருவையாறு மகாவித்தியாலயத்தில் கற்பித்தலை மேற்கொண்டு தற்போது ஓய்வு பெற்றிருக்கும் ஆசிரியை 1986ஆம் ஆண்டில் இருந்து ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்களைத் தயார்படுத்திவிடும் சேவையினைச்செய்து மாணவர்களைப் பரீட்சையில் சித்தியடைய வைப்பதில் தனக்கென தனியிடத்தைத்



ஆசிரியை திருமதி. சிவபாக்கியம்

தக்கவைத்துக்கொண்டு செயற்படுகிறார்.

''நான் 1986ஆம் ஆண்டுதான் முதல்முதலில் புலமைப்பரிசில் வகுப்பைப் பொறுப்பேற்றேன். அந்த ஆண்டே ஒரு மாணவி சித்தியடைந்தார். அதுவரைக்கும் திருவையாறு மகாவித்தியாலயத்தில் ஒரு மாணவரேனும் சித்தியடையவில்லை.

1987ஆம் ஆண்டு நான்கு மாணவர்களும் 88ஆம் ஆண்டு ஏழு மாணவர்களும், 89ஆம் ஆண்டு எட்டு மாணவர்களும் சித்தியடைந்தார்கள். அதில மாவட்டத்தில் முதல் மூன்று இடங்களையும் என்னுடைய மாணவர்கள் தான் எடுத்திருந்தனர்.

1990ஆம் ஆண்டு 14 பிள்ளைகளும், 1991ஆம் ஆண்டு 23 பிள்ளைகளும் சித்தியடைந்தனர். அந்தஆண்டு கிளிநொச்சி மாவட்டத்தில் சித்தியடைந்த மொத்த மாணவர் தொகை 46 ஆகும். இதில் அரைப்பங்கு பிள்ளைகள் என்னிடம் கல்வி கற்றவர்கள்.

1992ஆம் ஆண்டு 14 பிள்ளைகளும், 93ஆம் ஆண்டு 17 பிள்ளைகளும், 94ஆம் ஆண்டு 12 பிள்ளைகளும், 95ஆம் ஆண்டு 10 பிள்ளைகளும் சித்தியடைந்தனர். 96ஆம் ஆண்டு நான் ஓய்வு பெற்றுவிட்டேன். அதன் பின் பிள்ளைகள் என்னுடைய வீட்டிற்கு வந்து படித்தார்கள். அவ்வாறு 1996ஆம் ஆண்டு என்னிடம் வந்துபடித்த ஆறு பிள்ளைகளும் சித்தியடைந்தார்கள். இதில் ஒருவர் மாவட்ட மட்டத்தில் முதலாவது நிலையைப் பெற்றார்......" இவ்வாறு தனது கற்பித்தல் வெற்றியால் கிடைத்த மாணவர் தேர்ச்சியைப் பட்டியலாக வெளியிட்ட ஆசிரியையிடம்.

**உங்கள் கற்பித்தல் முறைகள் எவ்வாறானதாக இருக்கும்? என வினவினோம்.**

"என்னிடம் வருகின்ற எந்தப்பிள்ளையென்றாலும்சரி நான் எல்லாப்பிள்ளைகளையும் ஒரே நிலையில் வைச்சுத்தான் பார்ப்பேன். பணக்கார வீட்டுப் பிள்ளை, ஏழைப்பிள்ளை, ஆசிரியரின் பிள்ளை என்கின்ற எந்தவித வேறுபாடும் பார்க்க மாட்டேன். இதை நான் பிள்ளைகளுக்கும் சொல்லுவேன்.

கூடுதலாக நான் அன்பாலதான் கற்பிப்பேன். ஒரு விடயத்தை பிள்ளைகளுக்குத் தெளிவாக விளங்கும் வரைக்கும் திருப்பித்திருப்பி விளங்கப்படுத்துவேன்.

தண்டனை என்று நான் பெரிதாக எதனையும் கொடுப்பதில்லை. குழப்படி செய்கின்ற பிள்ளைகள் என்றால் நான் அவர்களைக் கூப்பிட்டு வைத்து புத்திமதி கூறுவேன். நீங்கள் இந்தவயதில் குழப்படியில்லாமல் படித்தால்தான் எதிர்காலத்தில் நல்ல மாதிரி வாழலாம் என்று சொல்லுவேன். அவர்களும் அதைக்கேட்டுத் திருந்தி விடுவார்கள். என்னிடம் படிக்கின்ற பிள்ளைகள் விருப்பத்துடன் வந்துதான் படிக்கின்றார்கள். அவ்வாறு பிள்ளைகள் படிப்பில் விருப்பம் கொள்ள வேண்டுமென்றால் அதற்கு ஆசிரியர்கள் தான் முன்னோடியாக இருக்கவேண்டும் என்பதுதான் எனது கருத்து. பெற்றோருக்கும் பிள்ளைகளைக் கற்பிக்க வேண்டும் என்ற ஆர்வம் இருக்கு . அதனால் தான் அவர்கள் என்னிடம் பிள்ளைகளைக் கொண்டு வந்து விடுகிறார்கள். பிள்ளைகளின் படிப்புப்பற்றி என்னிடம் அடிக்கடிக் கேட்பார்கள். நானும் குறைநிறைகளைச் சொல்லுவேன். இதனால் பெற்றோரும் பிள்ளைகளின் படிப்பில் ஊக்கப்படுத்தக் கூடியதாக இருக்கும்.

சில பெற்றோர் என்னிடம் வந்து "நீங்க என்னுடைய பிள்ளைக்கு என்னதண்டனை கொடுத்தாலும் பரவாயில்லை. பிள்ளையைப் படிப்பிச்சு விட்டாக் காணும் என்று சொல்லுவார்கள்." அவர்களின் அக்கறை எனக்குப் பூரணமாகக் கிடைக்கிறது. அதுவும் என்னுடைய கற்பித்தலில் வெற்றிக்குக்காரணம் என்று சொல்லலாம்" என்றார்


***தற்போது புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கு மிகவும் சுமையாக உள்ளது எனும் கருத்து நிலவுகிறது. உங்களைப் பொறுத்தவரை எப்படியாக உள்ளது? எனக்கேட்டபோது**

" உண்மையிலே இப்போது பாடத் திட்டங்கள் அதிகம் தான் மாணவர்கள் அறிந்து கொள்ள வேண்டிய விடயங்கள் நிறையவே இருக்கும். ஆனால் என்னைப் பொறுத்தவரை கஷ்ரம் இல்லை என்றுதான் சொல்லுவேன். நாங்கள் கற்பிக்கின்ற முறையினால் பிள்ளைகள் இலகுவாகக் கற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்" என்றார்.

*** தரம் ஐந்து புலமைப்பரிசில் வகுப்பிற்கு கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கு நீங்கள் என்ன ஆலோசனை சொல்ல விரும்புகிறீர்கள் எனக்கேட்டபோது.**

" உண்மையில் கற்பித்தல் என்பது மிகவும் புனிதமானது. பொறுமையும் அர்ப்பணிப்பும் வேண்டும். நான் இந்தப்பிள்ளைகளைச் சித்தியடைய வைக்கவேண்டும் என்கின்ற இலக்கு ஆசிரியரிடம் இருக்க வேண்டும்.

பிள்ளைகளை அன்பாகவும், ஆதரவாகவும் அரவணைத்து கற்பிக்க வேண்டும். எந்தப்பிள்ளைக்கு எப்படிச்சொன்னால் விளங்கும் என்பதை விளங்கி கற்பிக்கவேண்டும். எதையுமே எதிர்பார்க்கக்கூடாது. இதைத்தான் என்னால் சொல்லமுடியும்" என்றார்.



ஆசிரியையின் தற்போதைய மாணவர்கள்

*** இதுவரை உங்களிடம் கற்று வெளியேறிய மாணவர்கள் தற்போது எவ்வாறான நிலைகளில் இருக்கிறார்கள்? எனக் கேட்டோம்.**

"மருத்துவர்கள் பொறியியலாளர்கள் என்று பெரிய வேலைகளிலையும் இருக்கிறார்கள். அதைவிட உள்ளூரில் சமூகத்தில் நல்ல வேலைகளில் இருக்கிறார்கள்.

நான் கற்பித்த பிள்ளைகள் தற்பொழுது ஆள்அடையாளம் தெரியாத அளவிற்குப் பெரியவர்களாக வளர்ந்து விட்டார்கள். அவர்கள் என்னிடம் வந்து ரீச்சர் என்னைத் தெரிகிறதா? என்று கேட்பார்கள். அவர்கள் பெரியபெரிய பதவிகளில் இருக்கிறார்கள் என்று என்னிடம் கூறுவார்கள். அதைக் கேட்கும் போது எனக்குப்பெரிய சந்தோஷமாக இருக்கும்" என்றார்.

*** நீங்கள் கற்பித்த மாணவர்களில் மறக்க முடியாத மாணவர்கள் பற்றி.....?**

பொதுவாக எல்லாப்பிள்ளைகளையும் என்னால் மறக்க முடியாது. பவதாரணி என்கின்ற மாணவியைக் குறிப்பிடலாம். அவர் என்னிடம் 1989ஆம் ஆண்டு புலமைப்பரிசில் வகுப்புப் படித்து மாவட்ட மட்டத்தில் முதலாம் நிலையில் சித்தியடைந்தார். இப்போது யாழ்.பல்கலைக்கழகத்தில் மருத்துவபீட இறுதியாண்டு மாணவியாக இருக்கிறார். அவர் அண்மையில் என்னுடைய வீட்டுக்கு வந்தார் வந்த உடனேயே என்னுடைய காலில் விழுந்து வணங்கினார். இதை நான் எதிர் பார்க்கவேயில்லை. அவர் ஒரு ஆலயப் பூசகரின் மகள். அந்தநிலையிலேயும் அவரது பணிவு நன்றி உணர்வினைப் பார்க்கும் போது எனக்கு கண்ணீர்தான் வந்தது. அவரை என்னால் மறக்கமுடியாது.

இன்னுமொரு மாணவி பல்கலைக்கழகத்திலிலுருந்து கடிதம்போட்டா. "நீங்கள் இட்ட அத்திவாரம் என்னை இவ்வளவு தூரத்திற்கு உயர்த்தியது" என்று இப்படியான பிள்ளைகளை என்னால் மறக்கவே முடியாது." என்று கூறிய அந்த ஆசிரியையின் கண்களிலிருந்து வழிந்த ஆனந்தக்கண்ணீர் அவரின் கற்பித்தல் பயிரின் அறுவடைத் துளியாக விழுந்துகொண்டிருந்தன.

ஓய்வு பெற்ற பின்னரும் தனது பணியை வீட்டில் இருந்து செய்துவரும் ஆசிரியை 2002ஆம் ஆண்டு 11 மாணவர்களையும், 2003ஆம் ஆண்டு 10 மாணவர்களையும், 2004ஆம் ஆண்டு 6 மாணவர்களையும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைய வைத்து இவ்வாண்டிற்காக 15 மாணவர்களைப் பரீட்சைக்குத் தயார்படுத்தி வருகிறார்.

"வாங்கோ ரீச்சர்" எனும் பிள்ளைகளின் அன்புத் தொல்லைகளுக்கு முகம் கொடுக்க முடியாது எமக்கு விடைதந்து தனது கடமையில் கண்ணாகினார் ஆசிரியர். அந்த ஒரு காட்சியே அவரின் கற்பித்தல் திறமையின் சாட்சியாக எம்மால் உணரமுடிந்தது.

நேர் காணல்
ப.துஸ்யந்தனி

# ஈழத்தமிழரின் நிலைமையை நேரடியாக அறிந்துகொள்ள விசேட குழுவை அனுப்ப ஐ.நா.சபையில் கோரிக்கை

## சர்வதேச சனநாயக வழக்கறிஞர் சங்க சார்பில் விடுப்பு

"ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட ஈழத் தமிழர்கள் சொல்லொணாத் துயரங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். ஆனால் அவற்றை சிறிலங்கா அரசு கண்டுகொள்வதாகத் தெரியவில்லை. அவர்களின் நிலையை நேரடியாகக் காணச்சென்ற ஐ.நா. செயலாளர் நாயகத்தையும் தமிழர் பகுதிகளுக்கு அரசு அனுமதிக்கவில்லை.

ஆகவே ஐக்கியநாடுகள்சபை தனது விசேட குழுவை சிறிலங்காவுக்கு அனுப்பி அங்கு ஈழத்தமிழர் படும் துயரை அறிந்து அதற்கு நிவாரணமளிக்க வேண்டும்" தற்பொழுது ஜெனீவாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக்குழுவின் 61 ஆவது கூட்டத்தொடரில் சர்வதேச சனநாயக வழக்கறிஞர் சங்கம் சார்பில் உரையாற்றிய திருமதி. டீயேற்றி மக்கோனால் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார். அவர் அங்கு ஆற்றிய உரையில் மேலும் கூறியதாவது; "இலங்கைத்தீவில் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் மக்களுடைய அடிப்படை உரிமைகளும், சுதந்திரமும் மறுக்கப்பட்டு வருகின்றது. 1948 ஆம் ஆண்டு தொடக்கம் மொழி, கல்வி, நிலம், குடியுரிமை போன்ற பல விடயங்கள் சட்ட ரீதியாகவே மறுக்கப்பட்டுள்ளது. நீதி, சமத்துவத்திற்கான தமிழ்மக்களுடைய சாத்வீகப் போராட்டங்களை 1956 ஆம் ஆண்டு முதல் அரசு வன்முறைகள் இனக்கலவரங்கள் மூலம் அடக்கமுற்பட்ட காரணத்தினால், ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இப்படியான அரச வன்முறைகள் இறுதியில் தமிழ்மக்களை ஆயுதப் போராட்டத்திற்கு இட்டுச்சென்றன. கடந்த இருபது வருடகால யுத்தத்தினால் 79,000 இற்கு மேற்பட்ட தமிழ்மக்கள் கொல்லப்பட்டும், காணாமலும் போயுள்ளனர். ஐந்து இலட்சத்திற்கு மேற்பட்டோர் வெளிநாடுகளில் அரசியல் தஞ்சம் கோரியும், 2,375 இற்கும் மேற்பட்ட கிறிஸ்தவ தேவாலயங்களும், சைவக்கோயில்களும் இலங்கைத்தீவின் தமிழர்களின் தாயக பூமியான வடக்கு கிழக்கில் விமானக் குண்டுவீச்சினாலும், எறிகணைத் தாக்குதல்களினாலும் அழிக்கப்பட்டுள்ளன. கொலையும் பாலியல் வன்முறையும் சிறிலங்கா பாதுகாப்புப் படைகளினால் ஆயுதமாகப் பாவிக்கப்பட்ட காரணத்தால், ஆயிரக்கணக்கான தமிழ்ப் பெண்கள் பல விதங்களில் கொடூரமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இக்கொடூரச் செயல்களைக் கண்டித்து பல மனித உரிமை அமைப்புக்கள் குரல் கொடுத்தபோதும் சிறிலங்காவின் பாதுகாப்புப் படைகள் அரச ஆதரவுடன் எவ்வித விசாரணைக்கும் உட்படுத்தப்படாது, தொடர்ந்தும் கொடூரப் படையாக செயற்படுகின்றனர். கடந்த மூன்று வருடகாலமாக தமிழீழ விடுதலைப் புலிகளிற்கும், சிறிலங்கா அரசிற்கும் இடையில் நடைமுறையில் இருந்துவரும் யுத்த நிறுத்தம், இலங்கைத்தீவின் வடக்கு கிழக்கு தவிர்ந்த மற்றைய ஏழு மாகாணங்களுக்கு மட்டுமே பல நன்மைகளை கொடுத்துள்ளது. யுத்தநிறுத்த உடன்படிக்கையில் உள்ள சரத்துகளுக்கு எதிராகச் செயற்படும் அரசபடைகள், தமிழ்மக்களை பலவிதங்களில் கொடுமைப்படுத்தி வருகின்றன. பாதுகாப்புப் படையினர் தேவாலயங்கள், கோயில்கள் பலவற்றிலிருந்து தமது முகாம்களை விலக்கிக் கொண்டபோதும், இன்னும் பல இடங்களில் நிலை கொண்டுள்ளனர். அத்துடன் பாதுகாப்பு வலயம் என்று கூறி, போரினால் இடம்பெயர்ந்த மக்களை, இன்று பல வருடங்களாகியும் மீளச்சென்று தமது வீடுகளில் வசிக்க அனுமதிக்கவில்லை. வடக்கு கிழக்கில் வாழும் மக்கள், இப் "பாதுகாப்பு வலயங்கள்" யாருக்கு? என வினவுகின்றனர். இவையாவும் இராணுவ மயப்படுத்தப்பட்ட வலயங்கள் என்பதே உண்மை. யுத்த நிறுத்த உடன்படிக்கையின் பிரகாரம், அரசாங்கம் மூன்று வருடங்களுக்கு முன்னரே அரச தமிழ் கூலிப்படைகளை கலைத்திருக்க வேண்டியது கட்டாயம். ஆனால் இக் கூலிப்படைகள் இன்றும் அரச ஆதரவுடன் கிழக்கில் பல அரசியல்படு கொலைகளில் ஈடுபட்டுள்ளனர். இதனால் வடக்கு கிழக்கு வாழ் மக்கள் பெரும் பீதியடைந்துள்ளனர். கடந்த டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட ஆழிப்பேரலையால் வடக்கு கிழக்கே பெரும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளது. இப்பிரதேசங்களில் 24,500 இற்கு மேற்பட்டோர் இறந்தும், 10,000 இற்கு மேற்பட்டோர் காணாமல் போயும், ஏறக்குறைய ஏழு லட்சம் பேர் இடம்பெயர்ந்தும் உள்ளனர். இவர்களது 120,000 இற்கு மேற்பட்ட வீடுகள் அழிந்துள்ளன. ஆனால் கடற்கொந்தளிப்பின் அனர்த்தங்களை பார்வையிட இலங்கைத் தீவிற்குச் சென்ற ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கொபி அனான் அவர்களையே வடக்கு கிழக்கிற்கு செல்லவிடாது சிறிலங்கா அரசு தடுத்து நிறுத்தியுள்ளது. இதன் மூலம் ஐக்கிய நாடுகள் சபையின் உரிமைப் பத்திரத்தின் 100 ஆவது சரத்து, சிறிலங்கா அரசினால் மீறப்பட்டுள்ளது. ஆகையால், இந்த 61 ஆவது கூட்டத்தொடர் உடனடியாக ஓர் குழுவை சிறிலங்காவிற்கு அனுப்பிவைத்து அங்குள்ள உண்மை நிலைகளை அறிந்து, அங்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடன் நிவாரணம் வழங்க முன்வரவேண்டுமென வேண்டிக்கொள்கிறேன்" - என்று அவர் கூறினார். திருமதி. டீயேற்றி மக்கோனால் தமிழர் மனித உரிமை மையத்தின் சர்வதேச இயக்குநர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# பொலிஸ் விசாரணைகளின் போது கைதிகள் கொலை செய்யப்பட்டது சட்டவிரோதமானது

## - ஒப்புக்கொள்கிறார் சிறிலங்கா பொலிஸ்மா அதிபர்

(கொழும்பு)

பொலிஸ் விசாரணைகளின் போது 17 சந்தேக நபர்கள் கொலை செய்யப்பட்டது சட்டவிரோதமான செயல் எனமனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணையின் போது பொலிஸ்மா அதிபர் சந்திராபர்ணான்டோ ஒப்புக்கொண்டுள்ளார்.

இவர் கடந்த 21ஆம் திகதி ஆணைக்குழுவின்முன் ஆஜராகி இருந்தார். இக்கொலைகள் நீர்கொழும்பு ராகம, பேலியகொட, வெலிக்கட, நவகமுவ , மோதற, கொட்டாவ, அத்துருகிரிய, நிட்டம்புவ, தங்கல்ல ஆகிய பொலிஸ் நிலையங்களில் இடம்பெற்றுள்ளன.

மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் முன் சாட்சியமளிக்கையில், கைதிகள் கொலைசெய்யப்பட்டமை சட்ட விரோதமான செயல் என பொலிஸ்மா அதி பர் ஒப்புக்கொண்டுள்ளார்.

இதேவேளை "ஆரம்பிக்கப்பட்டுள்ள விசாரணைக்கு நான் பூரண ஆதரவு வழங்குவேன்" எனவும் தெரிவித்துள்ளார்.

# சந்தேக நபருக்கு விளக்கமறியல்

மட்டக்களப்பு-வாழைச்சேனை வீதி ஆறுமுகத்தான் குடியிருப்பில் கடந்த புதன்கிழமை மாலை ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் பயணம் செய்த வாகனம் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூடு மற்றும் கைக்குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக 23 வயது இளைஞரொருவர் சந்தேகத்தின் பேரில் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொத்துவில்லைச் சேர்ந்த யோகராஜா கமலக்கண்ணன் என்ற இந்த இளைஞர் கடந்த புதன்கிழமை இரவு அவரது சகோதரியின் வீட்டிலிருந்த போது கைது செய்யப்பட்டார்.

விசாரணையின் பின்பு இவர் நேற்று மாலை மட்டக்களப்பு நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டார். இவரை மேலதிக நீதிபதி எம்.எச்.எம். அஜ்மீர் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# மோப்பநாய் இறக்குமதியில் ஊழல் அதிகாரிகள் மீது விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

வெளிநாட்டிலிருந்து பொலிஸ் திணைக்களத்திற்கு முப்பது மோப்ப நாய்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.இதில் ஐந்து நாய்கள் அங்கவீனமடைந்து செயற்பட முடியாதுள்ளன. இந் நாய்களுக்காக பெருந்தொகையான பணம் செலுத்தப்பட்டதில் ஊழல்இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக ஆராய லஞ்ச ஊழல் திணைக்கள உதவி பொலிஸ் அதிகாரி உள்ளிட்ட பல பொலிஸ் உத்தியோகத்தர்கள் விசாரணைக்கு ஆஜர் செய்யப்பட்டுள்ளனர்.

# டெங்குக் காய்ச்சல் குறித்து அமைச்சு எச்சரிக்கை

இலங்கையில் மீண்டும் டெங்குக் காய்ச்சல் பரவுவதற்கான அபாயம் காணப்படுவதாக சுகாதார அமைச்சு எச்சரித்துள்ளது.

எதிர்வரும் மாரிகாலத்தின் பின்னர் டெங்குக் காய்ச்சல் பரவக்கூடுமென எச்சரித்துள்ள சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் நிகால் ஜயதிலக,மேலும் தெரிவிக்கையில் இதைக் கட்டுப்படுத்தும் நோக்கில் தேசிய டெங்குக் கட்டுப்பாட்டு இணைப்புப் பிரிவொன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் கூறியுள்ளார்.தொற்றுநோய் தடுப்புப் பிரிவில் நிபுணத்துவம் பெற்ற வைத்தியஅதிகாரியொருவரின் தலைமையின் கீழ் இந்தத் தேசிய டெங்குக் கட்டுப்பாட்டு இணைப்புப் பிரிவு செயற்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், சூழலை அசுத்தமாக வைத்திருப்பவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கையெடுக்கும் நோக்கில் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்படவிருப்பதாகவும் சிறிலங்கா சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் நிஹால் ஜயதிலக தெரிவித்துள்ளார். (32)

# மக்களுக்கு வழங்கவிருந்த மிருகங்களுக்கான உணவு

அம்பாந்தோட்டை மக்களுக்கு விநியோகிப்பதற்காக வைக்கப்பட்டிருந்த மிருகங்களுக்கு வழங்கும் உணவுப் பொருட்களடங்கிய பைக்கற்றுக்களை சுகாதார அதிகாரசபையினர் கைப்பற்றியுள்ளனர்.

கடற்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட அம்பாந்தோட்டை பகுதி மக்களுக்கு விநியோகிப்பதற்கென அரசசார்பற்ற நிறுவனமொன்று இந்த உணவுப் பொருட்களை களஞ்சியப்படுத்தி வைத்திருந்ததாகவும்,

இவற்றைத் தாம் கைப்பற்றியிருப்பதாகவும் சுகாதார அதிகாரசபையின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நாய்களுக்கு வழங்கும் உணவுகளடங்கிய 42ஆயிரம் கலன்களைக் கைப்பற்றியிருப்பதாகவும், அவை ஒவ்வொன்றும் தலா 213கிராம் நிறையுடையவை யெனவும் சுகாதார அதிகாரசபை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இந்த உணவுப் பொருட்கள் இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்குவதற்காக அம்பாந்தோட்டை நகரசபையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆயினும் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த உணவுப் பொருட்கள் மிருகங்களுக்கான உணவென்பது தமக்குத் தெரியாதென அம்பாந்தோட்டை நகரசபைத் தலைவர் டி.ஏ.காமினி கூறியுள்ளார்.

இதேவேளை, திருகோணமலையிலும், கடற்கோள் அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குவதற்கென களஞ்சியப்படுத்தி வைத்திருந்த இவ்வாறான மிருகங்களுக்கு வழங்கும் உணவுத் தொகுதியொன்றை அதிகாரிகள் கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (32)


எல்லைப்படை மாவீரர்களின்

குழந்தைகள் கௌரவிப்பும்

(காலை 11.00 மணி)




தமிழவளின் - எல்லைகாக்கும் இல்லங்கள் நூல் வெளியீடும்

(மாலை 3.00 மணி)

இடம்:கிளிநொச்சி கலைபண்பாட்டு மண்டபம்

காலம்: 02.04.2005 சனிக்கிழமை

மனையாள் மக்களென பாசப்பிணைப்பில் கலந்திருந்தவர்கள் சமர்க்களத்தில் விதையாகிப் போக, அவர்களின் நினைவுகளோடு பொறுப்புக்களையும் சுமந்தபடி வாழ்ந்துகொண்டிருக்கும் இல்லங்களின் கதைகள், அனைவரின் வீடுகளிலும் இருக்கவேண்டிய அரிய நூல். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

விளம்பர அனுசரணை:- ஈழநாதம்

கப்டன் வானதி வெளியீட்டகம்.

# தூத்துக்குடியில் பூமி அதிர்ச்சி

தூத்துக்குடி மாவட்டத்தில் ஏற்பட்ட பூமி அதிர்ச்சியால் ஏராளமான வீடுகளின் சுவர்களில் விரிசல் ஏற்பட்டது. பீதி அடைந்த மக்கள் வீதிகளில் படுத்து உறங்கினார்கள். கடந்த வியாழக்கிழமை இரவு 11.30 மணியளவில் தூத்துக்குடி மாவட்டத்தின் வட பகுதியில் பூமிஅதிர்ச்சி ஏற்பட்டது. தூத்துக்குடி, கோவில்பட்டி, விளாத்திக்குளம் மற்றும் அதன்சுற்று வட்டாரப் பகுதிகளில் அதிர்வு ஏற்பட்டது.



தூத்துக்குடி தெருக்களில் இரவு பெண்கள் கைக்குழந்தையுடன் மீண்டும் நில நடுக்கம் ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சத்தில் அமர்ந்திருக்கும் காட்சி.

# மொறிசியஸ் இந்தியாவுடன் ஒப்பந்தம்

இந்தியாவிற்கும் மொறிசியசிற்கும் இடையே நான்கு முக்கிய விடயங்கள் தொடர்பில் ஒப்பந்த ஏற்பட்டுள்ளது.

நான்கு நாள் பயணமாகமொறிசியஸ் நாட்டிற்குச் சென்ற இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் நேற்று முன்தினம் மொறிசியல் நாட்டின் பிரதமர் பால் ரெய்மண்ட் பெரிங்கர் மற்றும் மந்திரிகளுடன் விரிவாகப்பேச்சு நடத்தினார். அதைத் தொடர்ந்து நான்கு ஒப்பந்தங்கள் கையெழுத்தானது. அதில் முக்கியமானது சர்வதேச அளவில் தீவிரவாதத்தை ஒழிப்பது, அதை செயல்படுத்த கூட்டுச்செயல் குழு அமைப்பது, தீவிரவாதத்துடன் தொடர்புள்ள ஆயுதக்கடத்தல், போதைப் பொருள்ஒழிப்பது, இருநாடுகளும் தீவிரவாதத்தை கடுமையாக எதிர்க்கின்றன. என்றாலும் பயங்கரவாதத்தை ஒழிக்க மொறிசியஸ் கண்டிப்பான சட்டங்களை இயற்ற உள்ளது. அந்த சட்டத்தின் கீழ் தீவிரவாதத்துக்குத் தார்மீக ஆதரவு அளிப்பது குற்றம் ஆகும். தீவிரவாதிகளுக்கு நிதி உதவி கிடைப்பதைத் தடை செய்வதற்குக்கூட்டு கண்காணிப்புக் குழு நடவடிக்கை எடுக்கவும் ஒப்பந்தத்தில் வலியுறுத்தப் பட்டுள்ளது.

# கட்டாய திருமணம் தடுக்கப்பட்டது


(சென்னை)

தமிழகம் மைசூரில்15 வயது மாணவிக்கு நடக்கவிருந்த கட்டாயத் திருமணம் பொலிசாருக்கு கிடைத்த முறைப்பாட்டையடுத்து தடுத்து நிறுத்தப்பட்டது. மாணவியின் தந்தை தனக்கு இருதய நோய் உள்ளதால் மகளின் திருமணத்தை பார்க்க விரும்பியதாலேயே திருமணம் நடத்த முடிவெடுத்ததாக தெரிவித்து கல்யாணத்தை நடத்த முயன்றுள்ளார். இவ் விடயத்தில் குறிப்பிட்ட மாணவியை விசாரித்த பொலிசார் மாணவியின் விருப்பத்திற்கு மாறாக நடைபெறவிருந்த திருமணம் என கண்டறிந்து அத்திருமணத்தை தடுத்து நிறுத்தியுள்ளனர்.

# சங்கராச்சாரியார்களை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

சங்கரராமன் கொலை தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டிருக்கும் மாடாதிபதிகளான ஜெயேந்திரர், விஜேயந்திரர் உட்பட 24 பேருக்கு நேற்று முன்தினம் குற்றப்பத்திரிகை வழங்கப்பட்டது. குற்றப்பத்திரிகை பெறவந்தபோது சங்கராச்சாரியார்களுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நீதிமன்றுக்கு வெளியே இடம்பெற்ற இவ் ஆர்ப்பாட்டத்தை காஞ்சி வட்ட மக்கள் மன்றமும், மண்ணின் மைந்தர் கழகமும் இணைந்து நடத்தின. இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் ஜெயேந்திரருக்கு எதிரான கோஷங்களை எழுப்பினார்கள். மண்ணின் மைந்தர் கழக மாநில பொதுச்செயலாளர் பார்வேந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் " மக்கள் மன்ற" மகேஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர். காஞ்சி சங்கராச்சாரியார்களைக் கண்டித்து நகரில் 'சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டிருந்தன.



கோவில் மேலாளர் காஞ்சி சங்கரராமன் கொலை வழக்கு தொடர்பாக ஜெயேந்திரர், விஜயேந்திரர் உட்பட 24 பேருக்கு குற்றப்பத்திரிகை நகல்களை காஞ்சிபுரம் நீதிமன்றம் நேற்று முன்தினம் வழங்கியது. அனைவரையும் வரும் ஐந்தாம் திகதி ஆஜராகுமாறு நீதிபதி உத்தமராஜ் உத்தரவிட்டார். குற்றப்பத்திரிகை பெறவந்த சங்கராச்சாரியார்களையே படத்தில் காண்கின்றீர்கள்.

# 20 மாநிலங்களில் 'வற்' வரி

இந்தியாவில் மதிப்பு கூடுதல் வரி எனப்படும் வற்வரி விதிப்பு முறை ஏற்கனவே திட்டமிட்டபடி 20 மாநிலங்களில் நேற்று அமுல் படுத்தப்பட்டது. மேகாலயா மாநிலத்தில் அடுத்த ஒரு சில தினங்களில் வற் அமுல் படுத்தப்படுகிறது.

ஆனால் உத்தரப் பிரதேசம், தமிழ்நாடு மற்றும் பா.ஜ.ஆளும் ராஜஸ்தான், குஜராத் மத்திய பிரதேசம், ஜார்க்கண்ட் சத்தீஸ்கர் ஆகிய 5 மாநில அரசுகள் வற்வரி விதிப்பு முறையை அமுல்படுத்த மறுத்துள்ளன.






# வீரப்பன் விசாரணை முடிந்தது

(சென்னை)

சந்தனக்கடத்தல் வீரப்பன் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணைமுடிந்து, விசாரணை அறிக்கை அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டு விட்டதாக அரசதரப்புச்சட்டத்தரணி ஜெனரல் ஏ.எல்.சோமயாஜி தெரிவித்தார்.

வீரப்பன் சுட்டுக்கொல்லப்பட்டது பற்றி சி.பி.ஐ. விசாரணை நடத்த வேண்டும் என்று வீரப்பனின் மனைவி முத்துலட்சுமி உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்திருந்தார். இதன் மீதான விசாரணை நேற்று முன்தினம் வந்தபோது இந்தத் தகவலை அரச சட்டத்தரணி தெரிவித்தார்.


புத்தாண்டை முன்னிட்டு விசேட சலுகை

இன்றுமுதல் எமது நிறுவனத்தில் பிரதியாக்கம் செய்யும் அனைத்து அளவுகளிலுமான போட்டோக்களை அனைத்து வாடிக்கையாளர்களும் கொழும்பு விலையில் பிரதியாக்கம் செய்து பெற்றுக்கொள்ளமுடியும் என்பதனை மகிழ்ச்சியு டன் தெரிவிக்கிறோம்.




மூர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லாப்

யாழ்.வீதி, மானிப்பாய்.

T.P.:- 021 - 222 2884

(சி-11616)

# இந்திய-பாக்.ஒரு நாள் தொடர் இன்று கொச்சியில் ஆரம்பம்



இந்திய- பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான பரபரப்பு ஒருநாள் தொடரில் முதலாவது போட்டி இன்று கொச்சியில் ஆரம்பமாகின்றது.


இதற்காக இரு அணிவீரர்களும் நேற்று முன்தினமே தீவிர பயிற்சியில் ஈடுபட்டு இருந்தனர்

இந்திய அணியை பொறுத்தவரையில் வலுவான துடுப்பாட்டவரிசையை பெற்றிருந்தாலும் கடைசி டெஸ்டில் பாகிஸ்தானிடம் தோல்வி அடைந்துள்ளதால் ஒரு நாள் போட்டியில் சிறப்பாக ஆடி வெற்றி பெற வேண்டிய நிலையிலுள்ளது மேலும் டெஸ்டில் அணித் தலைவர் கங்குலி பொறுப்புடன் ஆடாததால் விமர்சனங்களுக்கு ஆளாகியுள்ளார்.'

டெஸ்ட் தொடரை சமன் செய்ததன் மூலம் பாகிஸ்தான் அணி புதுத்தெம்பை பெற்றுள்ளது அந்த அணி துடுப்பாட்டத்திலும் பந்து வீச்சிலும் சிறந்து விளங்குகிறது துடுப்பாட்டத்தில் இன்சமாம், யுனிஸ்கான், யுகானா ஆகியோர் நல்ல நிலையிலுள்ளனர் அப்ரிடி டெஸ்டில் அதிரடியாக ஆடி அரைச் சதம் அடித்தார் சமீபகாலங்களில் ஒரு நாள் போட்டியில் கடைசியாக களம் இறங்கிய அவர் இதன் மூலம் தொடக்க துடுப்பாட்டக்கராக ஆடுவார் அந்த அணியின் சகலதுறைவீரரான சோயிப் மாலிக் டெஸ்டில் ஆடவில்லை இதனால் இன்றைய போட்டியில் இடம் பெறுவார் மற்றபடி துடுப்பாட்ட வரிசையில் மாற்றம் இருக்காது பந்து வீச்சில், சமி, ரசாக் சிறப்பாக வீசி வருகின்றனர். கனேரியா பெங்களூர் டெஸ்டில் முத்திரை பதித்தார் மேலும் வேகப்பந்து வீச்சாளர் நவீத் உல்ஹசனுக்கும் வாய்ப்பு வழங்கப்படலாம்.

இந்திய அணிக்கு எல்லா வகையிலும் சவால் விடுக்கும் அணியாக பாகிஸ்தான் திகழ்கிறது இரு அணியிலும் சிறப்பான துடுப்பாட்டம் உள்ளதால் தொடர் மிக விறுவிறுப்பாகவும் கடும் போட்டி நிறைந்ததுமாக காணப்படும்

# ஹிண்ட்ஸ், சந்தர்போல் சதம் மே.தீவு வலுவான நிலையில்



தென்னாபிரிக்க அணி மேற்கிந்திய சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகின்றது. இரு அணிகள் இடையே நான்கு டெஸ்ட் மற்றும் ஐந்து ஒரு நாள் போட்டி நடைபெறுகிறது. இதில் முதல் டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் ஜோர்ஜ் டவுனில் தொடங்கியது. நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத்தீவு முதலில் துடுப்பாட இணங்கியது.


தொடக்க ஆட்டக்காரர்களாக ஹிண்ட்சும், சிமித்தும் களம் இறங்கினார்கள். ஓட்டம் 24ஆக இருந்தபோது சிமித் ஆட்டமிழந்தார். அடுத்து களம் இறங்கிய கங்கா ஓட்டம் ஏதும் எடுக் காமலும், பேகான் 35 ஓட்டங்களிலும் ஆட்டமிழந் தனர். இதனால், அந்த அணி 106 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டை இழந்தது. நான்காவது விக் கெட்டுக்கு அணித் தலைவர் சந்தர்போல் களம் இறங்கினார். இருவரும் அதிரடியாக ஆடி சதம் அடித்தனர்.



இதனால் நேற்று முன்தினம் முதல் நாள் ஆட்ட நேர முடிவில் மேற்கிந்தியத்தீவு 347 ஓட்டங்களைக் குவித்தது. ஹிண்ட்ஸ் 188 ஓட்டத்துடனும், சந்தர்போல் 102 ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

தென்னாபிரிக்க தரப்பில் நெல் 50 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

# இந்திய அணித்தலைவர் கங்குலிக்கு எந்தவித அனுதாபமும் காட்டோம்



இன்சமாம்

இன்று தொடக்கம் இந்தியாவுக்கெதிரான ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் அணித்தலைவர் கங்குலிக்கு எந்தவித அனுதாபமும் காட்டப்படாது என பாகிஸ்தான் அணித்தலைவர் இன்சமாம் உல்ஹக் தெரிவித்துள்ளார். தமது அணியில் அனைவரும் பலமிழந்து விட்டாலும், தான் எந்தவித அழுத்தத்திற்கும் முகம் கொடுக்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

கங்குலியின் அண்மைக்கால துடுப்பாட்டம் மிகவும் பின்தங்கியுள்ளதுடன் பாகிஸ்தானுடனான அண்மைய டெஸ்ட் போட்டியில் 21, 12,13 என்ற ஓட்டங்களையே பெற்றார்.

இன்சமாம் மேலும் தெரிவித்திருப்பதாவது எதிரணித் தலைவர் பல மற்றுக்காணப்படுவது எப்போதும் நன்மையே என்று கூறிய அவர் ஒரு நாள் தொடர் மிகுந்த சவாலாக இருக்கும் என்று தெரிவித்துள்ளார்.

# அமைச்சரின் தடையை எதிர்த்து கிரிக்கெட்சபை மனு

கிரிக்கெட் சபை நிர்வாகக் குழு மீது இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சர் விதித்துள்ள இடைக் காலத் தடையை எதிர்த்து நீதி மன்றத்தில் முறையீடு செய்துள்ளது அந்நாட்டு கிரிக்கெட் சபை.

நிதிவிவகாரத்தில் முறைகேடு நடந்து வருவதாகக் குற்றம் சாட்டி இலங்கை கிரிக்கெட் நிர்வாகக் குழுவின் அதிகாரத்தை நீக்கி இடைக் காலக் குழுவை கடந்த வாரம் நியமித்தார் அந்நாட்டு விளையாட்டுதுறை அமைச்சர் ஜீவன் குமாரதுங்க. இதை எதிர்த்து நீதி மன்றத்தில் புதன்கிழமை வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

# மீண்டும் வருகிறார் முரளிதரன் உசாரடைகிறார் ஷேன்வோர்ன்



இலங்கை கிரிக்கெட் அணியில் சுழற் பந்து சூறாவளி முரளி தரன் தோள் பட்டைக் காயத்திலிருந்து குணமடைந்து விட்டதால். விரைவில் அணிக்குத் திரும்பவுள்ளதாக நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் இவர் தோள்பட்டைக் காயம் காரணமாக கடந்த ஏழு மாதங்களாக சர்வதேச போட்டிகளில் கலந்துகொள்ளவில்லை. மெல்போர்னில் சனவரியில் நடந்த சுனாமி கிரிக்கெட் போட்டியில் மட்டும் பங்கேற்றார். தற்போது ஓய் வில் இருந்து வரும் முரளிதரன் நேற்று முன்தினம் நிருபரிடம் கூறுகையில் காயத்திலிருந்து தற்போது குணமடைந்து விட்டேன். இப்போது வலி ஏதும் இல்லை.

அடுத்த மாதம் லண்டன் செல்லவுள்ளேன். லங்காஷையர் கவுண்டி அணியில் இணைந்து ஒருநாள் போட்டிகளில் விளையாட விருப்பம் தெரிவித்துள்ளேன். விரைவில் அணிக்குத் திரும்புவேன் என்றார்.

# ஒரு நாள் போட்டித் தொடர் கடினமாக இருக்கும் இந்திய அணி பயிற்சியாளர் ஜோன்ரைட் பேட்டி



'ஒரு நாள் கிரிக்கெட் போட்டி தொடர் கடினமாக இருக்கும்' என்று இந்திய அணி பயிற்சியாளர் ஜோன்ரைட் கூறியுள்ளார்.

இந்தியா- பாகிஸ்தான் அணிகள் இடையேயான ஆறு ஒரு நாள் போட்டி தொடரில் முதல் ஒரு நாள் கிரிக்கெட் போட்டி கொச்சியில் உள்ள ஜவகர்லால் நேரு சர்வதேச விளையாட்டு மைதானத்தில் இன்று நடக்கிறது.

துடுப்பாட்டம் மற்றும் பந்து வீச்சு சம திறன் கொண்ட நல்ல அணி பாகிஸ்தான். அத்தோடு அந்த அணியின் களத்தடுப்பு நன்றாக இருக்கிறது. இந்த ஒரு நாள் போட்டி தொடர் கடினமாக இருக்கும் முதல் இரண்டு ஆட்டங்கள் மிகவும் முக்கியமானதாகும். இந்த ஆட்டங்களின் முடிவுத் தொடர் யாருக்கு? என்பதை நிர்ணயிப்பதாக இருக்கும். டெஸ்ட் போட்டியை வெல்லாத குறையை போக்கும் விதத்தில் ஒரு நாள் போட்டியை வெல்ல முயற்சிப்போம் இவ்வாறு ஜோன்ரைட் கூறினார்.

# மொனாக்கோ செஸ் ஆனந்த் சம்பியன்



மொனாக்கோ செஸ் போட்டியில் இந்திய வீரர் ஆனந்த் 'சம்பியன்' பட்டம் வென்றார். 14 ஆவது அம்பர் பிளின்ட் போலட் மற்றும் ரேபிட் செஸ் போட்டி மொனாக்கோவில் நடந்து வருகின்றது.

11சுற்றுகள் கொண்ட இந்த போட்டியில் 12 முன்னணி வீரர்கள் பங்கேற்று ஆடி வருகின்றார்கள் இதன் 10 ஆவது சுற்று ஆட்டம் நேற்று முன்தினம் நடத்தது. இதில் இந்திய கிராண்ட் மாஸ்டர் ஆனந்த் ரஷ்ய வீரர் பீட்டர் சிவிட்லெரை எதிர்கொண்டார் பிளின்ட் போல்ட் மற்றும் ரேபிட் ஆகிய இரு ஆட்டங்களும் சமனில் முடிந்தன.

10ஆவது சுற்று முடிவில் பிளின்ட் போல்ட் பந்தயத்தில் ஆனந்த் 7.5 புள்ளிகளுடன் முன்னணி வகிக்கிறார் மற்ற வீரர்கள் அவரை விட இரண்டு புள்ளிகள் குறைவாகவுள்ளனர். இதனால் ஆனந்த் இன்னும் ஒரு சுற்று இருக்கும் நிலையிலேயே ச ம்பியன் ஆனார். ஆம்பர் செஸ் போட்டியில் மூன்று பிரிவிலும் ஒரே வீரர் சம்பியன் பட்டம் வெல்வது இரண்டாவது முறையாகும் அந்தப் பெருமையை பெற ஆனந்த்துக்கு பிரகாசமான வாய்ப்பு உள்ளது.

# இன்றைய காஸ்பந்துப் போட்டி

எல்லைப்படைமாவீரர் நினைவாகவும் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்விவளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ்.மாவட்ட பிரிவின் ஆதரவுடன் வலிகாமம் உதைப்பந்தாட்ட லீக் நடத்தி வரும் உதைப்பந்தாடடச் சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு சுன்னாகம் கந்த்ரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள கழகங்களின் விபரம் வருமாறு;

வலிகாமம் லீக்கைச் சேர்ந்த அண்ணா விளையாட்டுக்கழகம் எதிர் யாழ்.லீக்கைச் சேர்ந்த றோயல் விளையாட்டுக்கழகம்.

வலிகாமம் லீக்கைச் சேர்ந்த சென் மேரிஸ்விளையாட்டுக்கழகம் எதிர் சென்றோக்ஸ் விளையாட்டுக் கழகம் (41)

# ஸ்கோர் போட் அமைக்க பழைய மாணவர் முன் வந்தனர்

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் புதிய ஸ்கோர்போட் அமைத்துக்கொடுப்பதற்கு பழைய மாணவர்கள் மூவர் முன்வந்துள்ளனர்.

சுமார் ஒரு லட்சத்தி ஐம்பதினாயிரம் ரூபா செலவில் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள இவ்ஸ்கோர்போட்டை யாழ்ப்பாணத்தில் தனியார் கல்வி நிலையங்களில் கல்வி கற்பிக்கும் பௌதீக ஆசிரியர் குமரன், சகோதரன் குகன் மற்றும் பொறியியலாளரான இ.நந்தரூபன்ஆகியோரே அமைத்துக் கொடுக்கவுள்ளனர். நவீன முறையில் கட்டப்படவுள்ள இவ்ஸ்கோர் போட்டுக்காக ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்டிருந்த ஸ்கோர்போட் அகற்றப்பட்டுள்ளது. (41)

# நாடாக் 100 ஓபன் டென்னிஸ் அரையிறுதியில் மவுரெஸ்மோ, கிலிஸ்டர்ஸ்



மியாமி ஓபன் டென்னிஸ் போட்டிகளில் கிம் கிலிஸ் டர்ஸ், மவுரெஸ்மோ ஆகியோர் அரை இறுதிக்கு தகுதி பெற்றனர்.

அமெரிக்காவில் உள்ள மியாமி நகரில் நாடாக் 100 ஓபன் டென்னிஸ் போட்டி நடந்து வருகிறது.

இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நடந்த கால்இறுதி ஆட்டம் ஒன்றில் பெல் ஜியம் வீராங்கனை கிம் கிலிஸ்டர்ஸ், ரஷ்ய வீராங்கனை எலீனா டெமெண்டிவாவுடன் மோதினார்.

இதில் கிம் கிலிஸ்டர்ஸ் 6-2, 6-1 என்ற நேர் செட்டில் டெமெண்டிவாவை தோற்க டித்து அரை இறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு கால் இறுதியில் முதல் நிலை வீராங்கனை அமெலி மவுரெஸ்மோ (பிரான்ஸ்) செர்பியா வீராங்கனை அனா இவானோவிச்சுடன் மோதினார்.


இதில் மவுரெஸ்மோ 6-1, 6-4 என்ற நேர் செட்டில் எலீனா டெமெண்டிவாவை தோற்கடித்து அரை இறுதிக்கு முன்னேறினார். அரை இறுதியில் மவுரெஸ்மோ, கிலிஸ்டர்ஸ் மோதுகிறார்கள்.




# விட்டோரி இடம் பெறமாட்டார்

நாளை மறுதினம் ஆரம்பமாகும் சிறிலங்காவுடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணியில் டானியல் விட்டோரி பங்கேற்க மாட்டார் என அறிவிக்கப்படுகிறது.

இவருக்குப் பதிலாக கைல் மில்ஸ் சேர்த்துக்கொள்ளப்படுவார். அவுஸ்திரேலியாவுடனான டெஸ்ட் தொடரை இரண்டுக்குப் பூச்சியமாகவும் ஒரு நாள் தொடரை ஐந்துக்குப் பூச்சியம் என்ற கணக்கிலும், தோல்வி கண்ட நியூசிலாந்து அணியில் மேற்படி ஒரு மாற்றம் மட்டுமே செய்யப்பட்டுள்ளது.



### சிந்தனைக்கு

விடுதலை வீரனின் சுயநலமற்ற - பற்றற்ற - வாழ்க்கை உன்னதமானது; அர்த்தமானது. சுதந்திரம் என்ற உன்னத இலட்சியத் திற்காக, அவன் தனது உயிரையும் அர்ப்பணிக்கத் துணிகிறான்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 02-04-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## யாரைக் கூறி என்ன பயன்?

"அரச நிர்வாகம் ஊழல் மோசடி நிறைந்து மோசமான நிலையில் உள்ளது. வைத்தியசாலைகளில் வைத்தியர்கள், தாதியர்கள் ஒழுங்காகக் கடைமையைச் 'செய்வதில்லை. சுகாதார திணைக்களத்தார் வேலை நிறுத்தம் மேற்கொள்வது இலங்கையில் மட்டும் தான். உலகில் வேறு எங்குமே இப்படி நடப்பதில்லை" என தனது ஆட்சியின் கீழ் உள்ள அரச ஊழியர்களையும், சேவைத்துறையினரையும் சாடுகின்றார் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரச நிர்வாக இயந்திரத்தில் உள்ளவர்களைச் சாடுவது இது முதல் முறையல்ல. இதற்கு முன்னரும் அவர்களின் செயற்திறமையின்மை பற்றி அவர் பிரஸ்தாபித்ததுண்டு. இதனைவிட சிறிலங்கா பொலிஸ் மற்றும் நீதித்துறை என்பனவற்றில் மலிந்து போய்விட்ட ஊழல் மோசடிகள் பற்றியும், அதனால் நாட்டிற்கு ஏற்பட்டுள்ள அவப் பெயர்கள் பற்றியும் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் அவர் பிரஸ்தாபித்திருந்தார்.

இவ்வாறு சனாதிபதி சந்திரிகா அரச நிர்வாகிகளையும் நீதி மற்றும் சிறிலங்காப் பொலிசாரையும் பிரஸ்தாபிக்கையில் சில ஊடகங்கள் அரசியல்வாதிகளின் மோசடிகள் பாதாள உலக கோஷ்டிகளுடன் அவர்களுக்குள்ள தொடர்புகள் அரசியல் வாதிகளின் குடும்பம் அதாவது மனைவி, மக்கள், உறவினர்களின் வன்முறைகள் அடாவடித்தனங்கள் என்பனவற்றை வெளியிட்ட வண்ணமுள்ளன.

அண்மையில் ஆங்கில வாரப் பத்திரிகை ஒன்று சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் மேல் மாகாண சபை அமைச்சர் ஒருவரின் வாகனம் ஒன்றில் சுனாமி நிவாரணப் பொருட்கள் கடத்திச் செல்லப்படுவதைத் தக்க ஆதாரங்களுடன் வெளியிடப்பட்டிருந்து. அரசாங்கம் சுனாமி நிவாரணப் பொருட்களில் அரச அதிகாரிகள் ஊழல் புரிந்தார்கள் என நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கையில் அரசியல்வாதிகளின் இத்தகைய மோசடிக்கு யார் பொறுப்பேற்பது?

அடுத்ததாக அண்மையில் சிறிலங்காப் பொலிசார் பாதாள உலகக் கோஷ்டியினர் மீது தீவிர நடவடிக்கை எடுக்கமுற்பட்டபோது, அதனைத் தடுத்து நிறுத்த ஆளும் கட்சி அரசியல்வாதிகள் பலர் தீவிர முயற்சிகள் மேற்கொண்டதாகவும் இத்தகைய நடவடிக்கைகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என சனாதிபதியிடம் கோரியதாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இவை தவிர அரசியல்வாதிகளின் குடும்பத்தினரின் உறவினர்களின் அராஜகங்கள், வன்முறைகள் என்பன இன்று முக்கியமான விவகாரமாகியுள்ளன. ஆட்கடத்தல், படுகொலை செய்தல், பாலியல் பலாத்காரம் புரிதல் பொது இடங்களில் ரகளை செய்தல் என்பது மட்டுமல்ல, மற்றவர்கள் மீது அவதூறான குற்றச்சாட்டுக்களைச் சுமத்துதல் போன்ற பல்வேறு அம்சங்களுடன் ஒரு காட்டுத்தர்பாரே நடத்தப்படுகின்றது.

இந்நிலையில் இன்று அரச நிர்வாகம் ஊழல் நிறைந்ததாகவும், மோசடிநிறைந்ததாகவும் மாறியுள்ளமைக்கு யார் காரணம் என்ற கேள்விக்கு சனாதிபதி சந்திரிகா கூறுவது போன்று அரச நிர்வாகத்திலுள்ள அதிகாரிகளா? அன்றி ஊடகங்களில் வெளியாகும் தகவல்கள் அவதானிப்புக்கள் அடிப்படையில் உணரக் கூடிய வகையில் உள்ள அரசியல்வாதிகளின் ஊழல் மோசடிகள் அதிகாரதுஷ்பிரயோகம் என்பன காரணமா? என்பது கேள்விக் குரியதே.

ஆனால் நிச்சயமாக ஒன்றைக் கூற முடியும் இவ் இருதரப்பினர் இடையேயும் ஊழல் மோசடியில் யாருக்கு அதிகபங்கு? யாருக்குக் குறைவு? என்பதைப்பற்றிப் பிரஸ்தாபிக்கலாமே ஒழிய இவ் இருதரப்பினருக்கும் இதில் பங்குண்டு என்பது மட்டும் உறுதியானது. சில வேளைவிகிதாசார ரீதியில் இவர்களின் பங்குப்பணி மாற்றம் அடையலாம்.

இதேவேளை சிறிலங்கா அரச நிர்வாகத்தில் நிலவும் ஊழல் மோசடி, நிர்வாகத்திறமையின்மை போன்ற விடயங்கள் குறித்து சர்வதேச நிறுவனங்கள் பல கடந்த காலத்தில் குறைப்பட்டுக் கொண்டதுண்டு. அரச ஊழியர்களின் செயற்திறனின்மை காரணமாகச் சிறிலங்காவிற்குக் கிடைக்கக் கூடிய பல உதவிகள் கூட நிறுத்தப் பட்டதோடு சிறிலங்கா நிர்வாகக் கட்டமைப்பில் கூட மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் எனக் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தவகையில் ஒரு புறம் பல்வேறு மட்டத்தில் புரையோடிப் போய்விட்ட ஊழல் மோசடிகள் என்பனவும், இன்னொரு புறத்தில் அதிகாரதுஷ்பிரயோகம், ஆட்கடத்தல் வன்முறை என்பனவும் மறுபுறத்தில் செயல்திறன்,அர்ப்பணிப்பற்ற அதிகாரிகள் என்பன இருக்கையில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க யாரைக்குறை கூறுவது? யாரைச் செல்லி என்ன பயன்?

ஆனால் சிறிலங்காவில் ஏற்பட்ட இத்தகைய சூழ்நிலைக்கு பொறுப்பேற்க வேண்டியவர்கள் அரசியல் வாதிகளே. ஏனெனில் சிறிலங்காவில் மேற்கூறப்பட்டவையாவும் வளர்ச்சி காணக் காரணமாக இருந்தது. தமிழர் தாயகம் மீது சிறிலங்கா ஆட்சியாளர்கள் நடாத்திய யுத்தமும் தமிழ்மக்கள் மீதான ஒடுக்கு முறையுமே ஆகும்.

ஆனால் சனாதிபதி சந்திரிகா இதனை மறுக்கலாம். இது அவர் தன்னைக் காத்துக்கொள்வதற்கானதே ஒழிய உண்மையல்ல.

# நலன்புரி நிலைய மக்களுக்கு எடுத்துவரப்பட்ட குடிநீரில் குளித்து அதிரடிப்படை அடாவடி!

— மண்டானைப் பகுதியில் சம்பவம்

(மட்டக்களப்பு)

மண்டானை நலன்புரி நியைத் திற்கு எடுத்துவரப்பட்ட குடிநீரை அதிரடிப்படையினர் குளித்துத்தீர்த்த துடன் மிகுதி நீரை வெளியே திறந்து விட்டு அடாவடிசெய்தமையால் கடந்த 29 ஆம் திகதி நலன்புரி நிலை யத்தில் உள்ள சுனாமியால் பாதிக்கப் பட்ட மக்கள் குடிநீர் இன்றிப் பெரும் அவதிக்குள்ளாகினர். அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றினால் வழங்கப்படும் இந்தக் குடிநீரை சம்பவதினம் பௌசர் மூலம் எடுத்துவந்த சமயம் அவற்றை மக்களுக்கு வழங்கவிடாது தடுத்ததுடன், படையினர் இவ்வாறு குடிநீரில் குளித்து கும்மாளமிட்டதுடன் மிகுதி நீரை தரையில் திறந்துவிட்டு மக்களுக்குக் குடிநீரை வழங்காது பழிதீர்த்தனர்.

இந்த நலன்புரிநிலையத்தில் வைத்து போராளி ஒருவரைப் படையினர் தாக்கியதும் அதனைப்பற்றி அறியச் சென்ற சமயம் அம்பாறை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் குயிலின்பன் மற்றும் போராளிகள் தாக்கப்பட்டமையை மக்கள் கண்டித்த மைக்குப் பழிவாங்கும் நடவடிக்கை யாகவே படையினர் இவ்வாறு செய் துள்ளனர்.

— வடக்குக் - கிழக்கில் ஆழிப்பேரலையால் பாதிப்புற்றுள்ள —

# மக்களின் நிரந்தர கட்டுமானப் பணிகளுக்கு உதவ கனேடிய தமிழர் பொதுச் செயலணி அமைப்பு

ஆழிப்பேரலை ஏற்படுத்திய அழிவுகளினால் பாதிப்புற்றிருக்கும் இலங்கையின் வடகிழக்கு பகுதிக ளில் வாழும் மக்களின் நிரந்தர கட்டுமானப் பணிகளுக்கு உதவும் நோக்கில் கனேடியத் தமிழர் மத்தியிலிருந்து ஒரு பொதுச் செயலணி உருவாக்கப்பட்டுள்ளது.

இச் செயலணி, கனேடியத் தமிழர் ஆழிப்பேரலை மீள்கட்டமைப்புச் செயலணி (Canadian Tamilas tsunami redevelopment) என்ற பெயரில் பணியினை ஆரம்பித்துள் ளது. வடகிழக்குப் பகுதிகளின் நிரந்தரக் கட்டுமானத்திற்காக 1.5 பில்லியன் டொலர் தேவை என மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. அரச உதவிகள் கிடைக்கும் என்ற நம்பிக்கை அற்றுப் போகும் நிலை யில் அழிவுற்ற பகுதிகள், மீள் கட்டு மானத்திற்காக அரச சார்பற்ற நிறுவனங்களையும், புலம்பெயர்ந்து வாழும் உறவுகளையுமே பெரிதும் நம்பியிருக்கின்றனர். இந்நிலையில், ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களின் இழப்பின் முழுமையை வெளிக்கொணர்வதுடன், பாதிக்கப்பட் டோரின் நிரந்தர மீள்கட்டமைப்புக்கு உதவ முன்வரும் மக்களையும் நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து மிக விரைவாகச் செயற்படுவதோடு, செயலணியின் தொடர் செயற்பாடாக கட்டங்கட்டமாக கட்டமைப்புப் பணி கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

வடக்குக்கிழக்கின் மீள்கட்டு மானத்திற்குத் தேவையான 1.5 பில்லியன் டொலர் என்ற பாரிய தொகையில் குறைந்தளவு ஒரு வீதத்தினை யேனும் இவ்வாண்டு நிறைவுக்குள் மக்களிடையே திரட்டி, கனேடியத் தமிழ்மக்கள் சார்பில் கட்டுமானப் பணிகள் நிறை வேற்றப்படும்.

இக் கனேடியச் செயலணியானது, தாயகத்தில் மீள்கட்டமைப்பில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் சமூக பொருளாதார அபிவிருத்தி அமைப்பு டன் தொடர்பு கொண்டு பாதிக்கப்பட்ட பல்வேறு பகுதிகளிலும் இருந்து செயற்றிட்டங்களைப் பெற்றுக் கொண்டுள்ளது.

இங்கு வாழும் தனிநபரோ, குடும் பங்களோ அல்லது நிறுவனங்களோ இச் செயற்றிட்டங்களை முழுமையா கவோ அல்லது சிறு பகுதிகளா கவோ பெற்றுக்கொண்டு இச் செயலணியினூடாக அவர்கள் பெயரிலேயே செயற்படுத்த முடியும்.

இவ்வகையில் முதற்கட்டமாக, பாதிப்புக்குள்ளான சுண்டிக்குளம் கிராமத்தில் உடனடியாக 50 குடும்பங்களை மீளக் குடியேற்றும் நோக்கில் அவர்களுக்கான நிரந்தர வீடுகளைக் கட்டிக் கொடுத்து, மீன்பிடி வள்ளங்கள், வலைகள் மற்றும் உபகரணங்களைப் பெற்றுக் கொடுப்பதனையே முதற்கட்டச் செயற்பாடாகச் செயலணி கொண் டுள்ளது.

இதற்கான நிதியினை ஏப்ரல் 30 ஆம் திகதிக்குள் திரட்டும் நோக்கில் செயலணியின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தாயக மீள்கட்டுமானத்திற்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் கொண்ட அனைவரும் இச்செயலணியோடு இணைந்து இதனூடாகச் செயற்ப டுமாறு இச்செயலணி வேண்டிக் கொண்டுள்ளது. 2347 Eglinton AvE Scarborough என்ற முகவரியில் இயங்கும் பணிமனையுடன் தொடர்பு கொண்டு தகவல்கள் பெறமுடியும்.

# ஆழிப்பேரலை அபாய அறிவிப்பால் காலியில் ஐந்து பெண்களுக்குப் பிரசவம்

(கொழும்பு)

காலி மகமோதர மகப்பேற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த கர்ப்பிணிகளில் ஐந்து பேர் திங்கட்கிழமை நள்ளிரவு குழந்தைகளைப் பிரசவித்துள்ளனர். கடல்கோள் அபாய அறிவிப்பு விடுக்கப்பட்டதையடுத்து இந்த வைத்தியசாயில் அனுமதிக்கப்பட்டிருந்த நிறைமாதக் கர்ப்பிணிகள் இங்குள்ள விகாரை ஒன்றில் தங்கவைக்கப்பட்டனர். இவர்கள் தங்க வைக்கப்பட்ட சில மணி நேரத்தில் ஐந்து பெண்களுக்கு பிரசவ வேதனை ஏற்பட்டதாகவும், சுகமாகக் குழந்தைகளைப் பிரசவித்ததாகவும் வைத்திய சலை வட்டாரங்கள் தெரிவித்தன. கடல்கோள் அதிர்ச்சியினாலேயே இவர்க ளுக்கு பிரசவவேதனை ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.இவர்கள் மீண்டும் செவ்வாய்க்கிழமை காலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இதேநேரம், இந்த மகப்பேற்று வைத்தியசாலை கடற்கரைக்கு அருகில் அமைந்துள்ளதால் வேறு பாதுகாப்பான இடத்திற்கு மாற்றுமாறு அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# அரச ஊழியர்களுக்கு வீடமைப்புக்கடன் சலுகைத் திட்டம் நேற்று முதல் அமுல்

(கொழும்பு)

அரச ஊழியர்களுக்கு குறைந்தவட்டியில் 10 இலட்சம்ரூபா வீடமைப்புக் கடன் வழங்கும்திட்டம் நேற்று முதல் அமுலுக்கு வந்ததுள் ளது. புதிய சுற்றறிக்கைக்குஅமைய அரச சேவையில் ஈடுபட்டுள்ள கணவன், மனைவி இருவரும் இந்தவீடமைப்புக் கடனை வெவ் வேறாக பெற்றுக்கொள்ள முடியும்.

கடன்வழங்கும் சுற்றறிக்கை நேற்று வெளியிடப்பட்டுள்ளது. அரசாங்க ஊழியர்களுக்கு பத்து லட்சம் ரூபா அல்லது.ஐந்து வருட சம்பளம் ஆகிய இரண்டில் குறைந்த தொகையைக் கடனாகப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் இதற்கு நான்கு வீத வட்டியும் அறவிடப்பட வுள்ளதாகவும், தெரிவிக்கப்படு கின்றது.

வீடொன்றை நிர்மாணிக்கக் காணியைக் கொள்வனவு செய்தல், புதிதாக வீடுகளை நிர்மாணித்தல், வீடொன்றுடனான காணியைக் கொள்வனவு செய்தல் அல்லது வீட்டுக்குப் புதியதொரு பகுதியை நிர் மாணித்தல் போன்ற நடவடிக்கை களுக்கு இந்தக் கடன் வசதியை அரசாங்க ஊழியர்கள் பெற்றுக் கொள்ள முடியும். 25 வருடங்களில் இந்தக்கட னைத் திருப்பிச்செலுத்த முடியும் எவ்வாறாயினும் ஊழியரின் ஒய்வுக் காலத்தைப் பொறுத்து இது மாற்றம் செய்யப்படும்.

# சட்டத்துறை அதிகாரிகளை அதிகரிக்க வலியுறுத்து

(கொழும்பு)

சிறிலங்காவில் சட்டத்துறை அதிகாரிகளை அதிகரிக்க நடவடிக்கையெடுக்க வேண்டுமென சட்டச் சேவைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. 1980ஆம் ஆண்டு சட்டத்துறைக்கு நியமிக்கப்பட்ட 3050 அதிகாரிகளே இன்னமும் கடமையாற்றிவருவதாகவும், மேலதிகமாக அதிகாரிகளை நியமிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கையெடுக்க வேண்டுமெனவும் சட்டச் சேவைகள் ஆணைக்குழு கோரிக்கைவிடுத்துள்ளது.

சிறலங்காவில் நீதிமன்றங்கள் அதிகரிக்கப்பட்டிருப்பதாகவும், குற்றச் செயல்கள் அதிகரித்திருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ள சட்டச் சேவைகள் ஆணைக்குழு, இவற்றின் தேவைக்கேற்ப சட்டத்துறை அதிகாரிகளையும் அதிகரிக்க வேண்டுமெனத் தெரிவித்துள்ளது.

# மணலாறு போர்முனை முன்னரங்கப் பகுதியில்

# போராளிகளுடன் மக்கள் கலந்துரையாடல்

## -உணவுப் பொருட்களையும் பரிமாறி மகிழ்ந்தனர்



(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு பிரதேச மக்கள் கடந்த புதன் கிழமை மணலாறு சிலோன் தியேட்டர் முன்னரங்க காவல் நிலைகளுக்குச் சென்று போராளிகளுக்கு உலர் உணவு வழங்கியதுடன் அவர்களுடன் கலந்துரை யாடியுள்ளனர்.

ஆனந்தபுரம், சிவநகர், இரணைப்பாலை மக்களே இந்நடவடிக்கையில் ஈடுபட்டனர். மணலாறு பிராந்திய நிர்வாகப் பொறுப்பாளர் நளன், களமுனை பொறுப் பாளர் சுடர்மாஸ்டர் ஆகியோர் மக்களுடன் கலந்து ரையாடினர்.

இதன்போது அவர்கள் கருத்துத் தெரிவிக்கை யில்,

எங்களது மனங்கள் குளிர்கின்றது. யுத்த காலத்தில் மட்டுமன்றி சமாதான காலத்திலும் எங் களைத் தேடி வந்திருக்கின்றீர்கள் எனத் தெரிவித்தனர். அத்துடன் இரணைப்பாலை பங்குத்தந்தை வணபிதா ஆனந்தகுமார், இரணைப்பாலை வலயப்பொறுப் பாளர் பரிதியும் உணவுகளைப் போராளிகளுடன் பரிமாறி ஒவ்வொரு போராளியும் எங்களுடைய காவல் தெய்வங்கள் சமாதான காலத்தில் நாங்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டுமெனத் தெரி வித்தனர்.

இதேவேளை இரணைப்பாலை, ஆனந்தபுரம், சிவநகர் மக்கள் சார்பாக தேசிய எழுச்சிப்பேரவை உறுப்பினரும், மாதர் சங்கத் தலைவியும் போராளி களைப் பாராட்டினர். (08)

# விடுதலைப்புலிகள் ஏடு இன்று வெளிவருகின்றது

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரப் பூர்வ ஏடான "விடுதலைப் புலிகள்" பத்திரிகையின் மாசி பங்குனி மாதத்திற்குரிய 122 ஆவது குரல் "சிங்கள அரசின் நிழல் யுத்தம்" என்ற முகப்புச் செய் தியுடன் இன்று வெளி வருகின்றது.

"கானல் நீராகும் பொதுக் கட்ட மைப்பு" எனச் சொல்லும் ஆசிரியர் தலையங்கத்துடன் வரும் இவ் வேடு க.வே.பாலகுமாரன் எழுதிய "தம் கருவிலே தம்மையே கரு வறுக்க தாமே கருக்களைக் காவு வோர்"என்ற அரசியல் கட்டுரையும் விடுதலைப்புலிகளைச் சூழும் அழுத்தம், கிழக்கு கொலைகளும், அரசின் ஆணைக்குழுவும், சிங்கள அரசியலின் சாராம்சம், துப்பாக்கி யைப் போலவே தென்றலும் புய லும், ஒடுக்குமுறைக்கான கருவி கள், சுனாமி மீள் குடியேற்றம், மீண்டும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் போன்ற அரசியல் கட்டுரைகளுடன் தமிழர் தாயகத்தைத் துண்டாக்கும் சிங்களக் குடியேற்றங்கள் என்ற தமிழர் தாயகத்தின் தொடர்ச்சியை துண்டாட விளையும் குடி யேற்றங்கள் பற்றிய தொடர் கட்டு ரையின் முதற் பகுதியும் கலாநிதி க.சோமஸ்கந்தன் எழுதிய "தன் னார்வத்தொண்டு நிறுவனங்களும் இன்றைய உலக ஒழுங்கும்" என்ற கட்டுரையும் தாங்கி இவ்வேடு வரு கின்றது. மற்றும் உலைக்களம் விழுதுகள் போராளிகளின் படைப் புக்களையும் வழமையான அம் சங்களையும் தாங்கி இவ்வேடு வெளி வருகின்றது.

# கிளி.மாவட்ட வைத்தியசாலையில் பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை

## -ஏப்ரல் ஒன்பது மீண்டும் ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் மீண்டும் எதிர்வரும் ஒன்பதாம் திகதி முதல் பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சைகள் நடை பெறவுள்ளதென கிளி.மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சதானந்தன் தெரிவித்துள்ளார்.

லண்டனிலிருந்து வருகை தந்துள்ள சத்திரசிகிச்சை நிபுணர் பிலிப் கிரே என்பவரால் மேற்படி பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சைகள் நடைபெற வுள்ளது.

மேற்படி வைத்திய நிபுணரினால் மாவட்ட வைத்தியசாலையில் வைத்து ஐம்பதுக்கு மேற்பட்டோருக்கு கடந்த மாதம் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# பொறியியல் ஆய்வு கூடம் கிளிநொச்சியில் திறப்பு

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட கட்டடத் திணைக்கள வளாகத்திற்குள் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பொறியியல் ஆய்வுகூட மண்டபம் நேற்று நண் பகல் 12.00 மணியளவில் வட கிழக்கு நிகொட் திட்டப்பணிப்பாளர் ரி.லங்காநேசன் அவர்களால் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பிரதம பொறியியலாளர் எம்.சந்திரகுமார் தலைமையில் நடை பெற்ற இந்நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியினை கிளிநொச்சி பிரதேச நிர்வாகசேவைப் பொறுப் பாளர் சந்திரன் ஏற்றிவைத்தார்.

ஆய்வு கூடத்தினை ரி.லங்கா நேசன் திறந்துவைத்தார். இங்கு உரைகளை ரி.லங்காநேசன், நிர்வாக சேவையைச் சேர்ந்த இசையமுதன், கல்விக்கழகப்பொறுப்பாளர் வெ. இளங்குமரன், வவுனியா மாவட்ட பிரதம பொறியியலாளர் ஆகியோர் நிகழ்த்தினர்.

இவ் ஆய்வுகூட திறப்பு விழா விற்கு கிளிநொச்சி மாவட்ட நிகொட் திட்டப்பணிப்பாளர் பார்த்தீபன், பிரதி மாகாண சுகாதாரசேவைகள் பணிப்பா



ளர் சத்தியமூர்த்தி, மற்றும் பிரதம பொறியியலாளர்கள், பொறியியலா ளர்கள் எனப் பலரும் கலந்து கொண் டனர். (கு)

### வாகரை....

கள் திருகோணமலை மாவட் டத்தினால்தான் இனிமேல் கண் காணிக்கப்படவுள்ளது.

எனவே அந்த நடவடிக்கையை திருகோணமலை மாவட்ட கண் காணிப்புக்குழுவினர் கவனிப்பது இலகுவாக இருக்கும், நாங்கள் தொடர்பு கொள்ளவும் இலகுவாக இருக்கும். என்ற காரணத்தினால் அந்த மாற்றத்தைச் செய்யுமாறு திருகோணமலை மாவட்ட கண்கா ணிப்புக்குழுவினரிடம் கேட்டோம். அவரும் இதனைச் செய்வது தங்க ளுக்கும் இலகுவானதெனவும் தங்களுடைய தலைமையகத்துடன் கதைத்து உரிய மாற்றங்களைச் செய்வதாகவும் கூறினார் என எழிலன் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தி னுடைய நடவடிக்கைகள் சம்பந் தமாக திருகோணமலை மாவட்ட கண்காணிப்புக் குழுவினருடன் தான் நாங்கள் தொடர்புகளை வைத் திருக் கின்றோம். ஆகையினால் வாக ரைப் பிரதேசத்தை திரு கோண மலை மாவட்ட கண்காணிப்புக் குழு வினர் கண்காணிப்பார்களேயா னால் நாங்கள் இங்கேயே தொடர் புகளை வைத்திருப்பது இல குவாக இருக்கும் என்ற காரணத் தினாலேயே இதனைக் கேட்டோம் என்றார் அவர்.

### தமிழர்...

உறுப்பினருமான உல்லா அன்ரில்லா பங்கேற்றனர்.

ஒருமணிநேரத்திற்கும் சற்று அதிகமாக இடம்பெற்ற இந்தச் சந் திப்பின்போது, தற்போது நடை முறையிலுள்ள யுத்த நிறுத்த ஒப் பந்தம், கள நிலவரம், சமாதான முயற்சிகளின் தேக்கநிலை, ஆழிப் பேரலையின் பின் எழுந்துள்ள மனிதாபிமான மீள்கட்டு மானப் பணிகள் குறித்த சர்ச் சைகள், நிவா ரண உதவிகள் பாதிக்கப்பட்ட அனைத்துத் தரப்பினருக்கும் வழங் கப்படுவற்கான அவசியம் போன்ற விவகாரங்கள் உட்பட, சிறிலங்கா வின் தற்போதைய அரசியல் சூழ் நிலை குறித்தும் விவாதிக்கப் பட்டதுடன், விளக்கமும் அளிக்கப் பட்டுள்ளது. மனித உரிமைகள் மதிக்கப்படுவது குறித்த கருத்துப் பரிமாற்றத்தின் போது, கடந்த 20 வருடகாலப் போரினால் பொது மக்க ளுக்கு எழுந்துள்ள சமூக பொரு ளாதார மனிதாபிமான மனித உரிமை குறித்த சிக்கல்கள், எது வித பலா பலனுமற்ற யுத்த நிறுத்த உடன் படிக்கை, ஆழிப்பேரலை நிவாரணப் பணிகளில் பொதுக் கட்டமைப்பை உருவாக்குவதில் எழுந்துள்ள இழுபறிகள் குறித்தும் விவாதிக்கப்பட்டதுடன், தெளிவான விளக்கமும் வழங்கப்பட்டது. பின் லாந்து நாடாளுமன்ற உறுப்பின ரும் மனித உரிமைகள் அமைப்பின் உப தலைவருமான காரி இயோ ரில்லா, வெளிநாட்டு அமைச்சகத் தின் செயலாளர் போலாமெய் சாண்டர் ஆகியோரும் இந்தச் சந்திப்பில் உடன் இருந்தார்கள்.

### கன்ரர்...

காந்திக்குமார் (வயது 29) என்பவரே மேற்படி சம்பவத்தில் பலியானவராவார்.

மேற்படி விபத்துக் குறித்து மாங் குளம் தமிழீழ காவல்துறையினர் விசாரணையினை மேற்கொண்டு வருகின்றனர். (சோ)

### சனாதிபதியின்...

அனுமதியை அவற்றிக்கு பெற்றுக் கொள்ள வேண்டும் என அமைச்சர் குழுவொன்று அறிவு றுத்தியுள்ளதாக லங்காதீப சிங்கள நாளிதழ் தெரிவித்துள்ளது.

மேலும் இது விடயமாக அமைச்சர் குழுவொன்று சனாதி பதியை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கும் தீர்மானம் எடுத் துள்ளது.

சனாதிபதி சந்திரிகா குமார துங்கவின் தன்னிச்சையான தீர்மா னங்களால் அரசிற்கும் பல உட்பூ சல்கள் அதிகரித்துள்ளதென அமைச்சர் குழு சுட்டிக் காட்டியிருப் பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### பார....

ஞானிமடப்பகுதியில் இரு மாணவர்களும் பாரவூர்தியி னால் மோதுண்டு காயமடைந்த நிலையில் பூநகரி அரசினர் வைத் தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு அங்கிருந்து அம்பியுலன்ஸ் வண்டி மூலம் கிளி.மாவட்ட வைத்திய சாலைக்கு எடுத்துவரப்பட்டு சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது காயமடைந்தவர்களில் ஒரு மாண வன் மேலதிக சிகிச்சையின் பொருட்டு யாழ்.போதனா வைத்திய சாலைக்கு அனுப்பிவைக்கப் பட்டார்.

மேற்படி சம்பவத்தில் காய மடைந்த சஞ்சையன் தயந்தன் (வயது 13) என்னும் மாணவன் கிளி.மாவட்ட வைத்தியசாலை யிலும், பாஸ்கரலிங்கம் நிதிசன் (வயது 14) என்னும் மாணவன் யாழ்.போதனா வைத்தியசா லையிலும் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றனர். (சோ, 34)

### 50 ஆயிரம்..

மாவட்டங்களில் இராணு வத்தில் இருந்து விலகிக்கொண் டுள்ளதாகவும் இப்பொழுதும் தப்பியோடித் தலைமறைவாகியுள் ளோர் சுமார் 50 ஆயிரம் பேர் இருப்பதாகவும், இராணுவ அதி காரி ஒருவர் கூறியிருக்கிறார். இவர்களில் பலர் குற்றச்செயல்க ளில் ஈடுபடுவதுடன் பாதாள உல கக் குழுக்களுடன் இணைந்து மோசமான குற்றச்செயல்களில் ஈடுபடுவதாகவும் குற்றச்செயல்கள் அதிகரிப்பதற்கு இவர்களும் கார ணமாக இருப்பதாகவும் சிறிலங்கா அரசாங்கம் தெரிவித்து வருகிறது.

இவர்கள் தப்பியோடும் போது தம்வசம் வைத்திருந்த ஆயுதங்க ளுடன் தப்பிச்சென்றுள்ளமையும், இந்த ஆயுதங்கள் பல்வேறு சிங்கள வன்முறைக்குழுக்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ள மையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ள தென பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தப்பியோடிய படையினர் தொழில் வாய்ப்புக்களை சட்டபூர்வமாகப் பெறவோ இயல்பு வாழ்க்கையில் ஈடுபடவோ முடியாத நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

### சிறுமி....

சிறுவர் பாதுகாப்பு அதிகாரி லாறா ஸ்கொட்டிடம் ஒப்படைக் கப்பட்டார்.

18 வயதுக்குக் குறைந்தவர் களை தமது அமைப்பில் இணைத்துக்கொள்வதில்லை என்ற நிலைப்பாட்டில் தாம் உறுதியாக இருப்பதாக, இந்த நிகழ்வில் கலந்துகொண்ட புலிகளின் அம்பாறை மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் ஆவர்த்தனா தெரிவித்துள்ளதாகவும், புலிகளின் மாவட்ட அரசியல்துறையினர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கடந்த 18ஆம் திகதி தமது அமைப்பில் இந்தச் சிறுமி இணைந்துகொள்வதற்கு வந்ததா கவும், சிறுமியின் எதிர்கால கல்வி நடவடிக்கைகளைக் கருத்திற்கொண்டு தாம் யுனிசெப் அதிகாரிகளிடம் அவரைக் கையளித்துள்ளதாகவும் அவர் கூறியதாக, அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

### புலிகளின்...

துக்கொண்டிருந்த சுமார் 30 பேர் கொண்ட விடுதலைப்புலிக ளின் அணியினர் பயணித்த வாக னம் செங்கலடி கறுத்தப்பாலம் எனுமிடத்தில் அமைந்துள்ள இராணுவத்தினரின் சோதனைச் சாவடியில் வைத்து இராணுவத் தினரால் சோதனைக்குட்படுத் தப்பட்ட வேளை சிறிலங்கா இரா ணுவ பொலிசைச் சேர்ந்த கோப்ரல் ஒருவர் தமிழீழ அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினியின் வாகனத்தினருகே நின்ற பெண் போராளியை அவ்விடத்தை விட்டு விலகிச்செல்லுமாறு பல தடவை கூறியுள்ளார். இராணுவத்தினரின் சதி நடவடிக்கைகளை உணர்ந்த அப்போராளி அவ் விடத்தை விட்டு விலகமறுத்தத்தையடுத்து அவ் இராணுவக் கோப்ரல் தனது கையில் மறைத்து வைத்திருந்த இரண்டு துப்பாக்கி ரவைகளை அவ் வாகனத்தினுள் போட முனைந்தார். இதனை அவ தானித்த போராளிகள் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு வினரிடம் முறையிட்டதையடுத்து அவ் இராணுவக் கோப்ரல் விசாரணைக்குட்படுத்தப்பட்டார்.


## பணிநிலை வேண்டுகை

ஈழநாதம் பத்திரிகை நிறுவனத்திற்கு ஒப்புநோக்குநர், ஆங்கில-தமிழ் மொழிபெயர்ப்பாளர் பணிநிலைகளுக்குத் தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பணிநிலை:-** ஒப்புநோக்குநர்

**அகவை :-** 25இற்கு மேற்பட்டோராக இருத்தல் வேண்டும் (ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)

**கல்வித்தகைமை :-** க.பொ.த (உ/த) பரீட்சையில் தமிழ்ப்பாடத்தில் சித்தியடைந்தவர்களாயிருத்தல் வேண்டும். அல்லது ஓய்வு பெற்ற அலுவலர்கள் அல்லது அனுபவம் உடையவர்கள் விரும்பத்தக்கது.

**ஆங்கில-தமிழ் மொழிபெயர்ப்பாளர் :-**

முன் அனுபவமும் அரசியல் குறித்த துறைசார்ந்த அறிவும் உடையோர் விரும்பத்தக்கது.

குறிப்பு:- உணவு, தங்குமிட வசதி வழங்கப்படும்

வேதனம்:- நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

தகுதியுடையவர்கள் 06.04.2005(புதன்கிழமை)காலை 10.00 மணிக்கு கிளிநொச்சியிலுள்ள ஈழநாதம் பணிமனைக்குச் சமூகம் தரவும்

நிர்வாகம்


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது